# பேனா குரல்

# PENA KURAL

தமிழ் மாதஇதழ்
Tamil Monthly


மலர்: 01 | இதழ்: 07 | மே 2023 | விலை: ₹ 20/- | ஆண்டு சந்தா: ₹ 240/- | சென்னை
Volume: 01 | Issue: 07 | May 2023 | Price: ₹ 20/- | Annual Aubscription: ₹ 240/- | Chennai



## 100% சாதித்த காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்!

## விருது வழங்கிய மத்திய அரசு!

www.penakural.com


Ministry of Education
Government of India
सत्यमेव जयते
Azadi Ka Amrit Mahotsav
PM SHRI
PM ScHools for Rising India
Empowering students with 21st century skills
• More than 14500 Schools across the country to emerge as Exemplar Schools
• Centrally sponsored scheme (PM SHRI Schools) will be for a period of 5 Years i.e. 2022 - 2027
• PM SHRI schools will showcase all the components of NEP 2020
• Total project cost - Rs. 27360 crore over a period of 5 years
• Total Central share will be Rs. 18128 crore
@EduMinOfIndia
@EduMinOfIndia
HRDMinistry
@eduminofindia


PM SHRI Yojana
PM announces
Pradhan Mantri Schools for Rising India
PM-SHRI YOJANA
• Development & Upgradation of 14,500 schools across country
• Development of 'Model Schools', encapsulating full spirits of NEP

# பேனா குரல்

**PENA KURAL**

தமிழ் மாத இதழ்

R.Dis. No.: 939/2022

மலர்: 01 இதழ்: 07 மே 2023 விலை: ₹20/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : NV சிவசங்கர்



ஆசிரியர் : ராதிகா S, B.E.,

நிர்வாக ஆசிரியர் : P. கார்த்திகேயன்

துணை ஆசிரியர்கள் :
துரை. சந்துரு, N.மதிவாணன், M.சந்திரசேகர் K.அழகர்சாமி, V.அய்யனார், P.ஸ்டாலின் B.நாராயணசாமி, T.சிவக்குமார், M.அறிவுநிதி

தலைமை நிருபர்கள் :
B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், B.மணிகண்டன், A.தங்கராஜ், K.மாரிதுரை, M.திலிப் குமார், P.அசோக்குமார், P.ஜேசுராஜ், J.தனசேகர், K.சுபுலட்சுமி

நிருபர்கள் :
B.சரவணன், தமிழ் மணி, U.சரவணன், K.கலைமணி, D.பாமா, ஜெபசீலன், N.விஜயலட்சுமி, தமிழ் வீரன், A.ஐயப்பன், அன்பு மணி, R.பிரகாஷ், G.தீபக், V.கண்ணபிரான், தமிழினி, T.அஜி

புகைப்பட நிருபர்கள் :
V. கவியரசன், K. மிதுன் சாய்

ஓவியங்கள்: V. சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்: G. நாகராஜ், B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *RS Sun Printz*



நிர்வாக அலுவலகம் :
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு :
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com



* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது. *


தலையங்கம் — ஆசிரியர் குரல்

# இந்தியாவில் புலிகள் பாதுகாக்கப்படுகிறதா?

காடுகள், வனவிலங்குகளின் பாதுகாப்பு என்பது பொருளாதார வளர்ச்சிக்கு எள்ளளவும் குறைவில்லாத முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில் யாருக்கும் இருவேறு கருத்து இருக்க முடியாது. சூழலியலும் பொருளாதாரமும் ஒருங்கிணைந்து செயல்படும் என்கிற பிரதமர் நரேந்திர மோடியின் அறிவிப்பு ஆறுதல் அளிக்கிறது. வனப்பாதுகாப்பு சட்டத்தில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் திருத்தங்கள், காடுகளுக்கும் வனவிலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்கிற சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் எச்சரிக்கையின் பின்னணியில் பிரதமரின் அறிவிப்பைப் பார்க்கத் தோன்றுகிறது.

2018 கணக்கெடுப்பில் 2,967-ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை, 2022 கணக்கெடுப்பில் 3,167-ஆக அதிகரித்திருக்கிறது. புலிகள் மட்டுமல்ல, சிங்கங்களின் எண்ணிக்கையும் 523-லிருந்து 674-ஆகவும், சிறுத்தைகளின் எண்ணிக்கையும் 7,110-லிருந்து 12,852-ஆகவும் அதிகரித்திருக்கின்றன. உலகிலுள்ள புலிகளில் 75% இந்தியாவில் இருப்பதாலும், புலி இந்தியாவின் தேசிய விலங்காக அறிவிக்கப்பட்டிருப்பதாலும் புலிகளின் இனம் அழிந்துவிடாமல் பாதுகாக்கும் கடமை நமக்கு உண்டு.

புலிகள் பாதுகாப்பு சிறப்புப் படை வெளியிட்டிருக்கும் புலிகளின் தற்போதைய நிலை குறித்த அறிக்கை, சில தகவல்களை வெளிப்படுத்துகிறது. புலிகள் வாழும் முக்கியமான ஐந்து பகுதிகளில் காடுகள் அழிக்கப்படுவதாலும், புலிகள் இயங்கும் வழித்தடம் குறைந்து வருவதாலும் அப்பகுதிகள் பாதிப்பை எதிர்கொள்கின்றன என்கிறது அந்த அறிக்கை. உலகிலேயே மிக முக்கியமான பல்லுயிர்ப் பெருக்க மையமாகக் கருதப்படும் மேற்கு தொடர்ச்சி மலை இந்தியாவின் மிக முக்கியமான புலிகள் வசிப்பிடமும்கூட. பாதுகாக்கப்பட்ட சரணாலயங்களில் புலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில், மேற்கு தொடர்ச்சி மலை காடுகளில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

புலிகளைப் பாதுகாப்பது எளிதான பணியல்ல. புலிகள் வாழ வேண்டுமானால், அவற்றைப் போலவே வனப்பகுதிகளில் உள்ள ஏனைய விலங்குகளும் வாழ வேண்டும். அடர்ந்த காடுகளில்தான் புலிகள் சுதந்திரமாக இயங்கி இனப்பெருக்கத்தில் ஈடுபடும். சுற்றுலா, வளர்ச்சிப் பணிகள் உள்ளிட்டவை காரணமாக வனவிலங்குகளின் இனப்பெருக்கம் தடைபடும் என்பது உறுதிப்பட்டிருக்கிறது. முக்கியமான புலிகள் சரணாலயங்களும், புலிகளின் வழித்தடங்களும் சாலைகள், ரயில் பாதைகள் போன்ற கட்டமைப்புப் பணிகளால் பாதிக்கப்படுகின்றன என்கிற வனவிலங்கு ஆர்வலர்களின் விமர்சனம் நியாயமானது.

வனவிலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு இல்லாமல் இருப்பது மிகவும் முக்கியம். பிரதமர் கூறியிருப்பதுபோல, வளர்ச்சிப் பணிகளும், வனப்பகுதிகளின் பாதுகாப்பும் ஒன்றையொன்று பாதிக்காமல் தொடர்ந்தால் மட்டுமே புலிகள் உள்ளிட்ட சரணாலயங்கள் பாதுகாக்கப்படும்.

**– ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்

# 100% சாதித்த காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்!



# விருது வழங்கிய மத்திய அரசு!

**ஜல் ஜீவன் மிஷன்**

ஜல் ஜீவன் மிஷன் என்பது 2024 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் தனிப்பட்ட வீட்டு குழாய் இணைப்புகள் மூலம் பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீர் வழங்க ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட திட்டமாகும். நீர் மேலாண்மை, நீர் சேமிப்பு, மழை நீர் சேகரிப்பு மூலம் நிலத்தடி நீரை அதிகரித்தல் மற்றும் மறுபயன்பாடு போன்ற நடவடிக்கைகளை இந்த திட்டத்தின் மைய நோக்கமாகும்.

**பிரதமர் விருது**

அவ்வாறு காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிராமப்புற வீடுகளுக்கு இத்திட்டத்தின் கீழ், 100 சதவீதம் குடிநீர் இணைப்பு வழங்கியதற்காக மத்திய அரசின் பிரதமர் விருது காஞ்சிபுரம் ஆட்சியர் ஆர்த்திக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வருகின்ற ஏப்ரல் மாதம் 21 ஆம் தேதி டெல்லியில் நடைபெற உள்ள விருது வழங்கும் விழாவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு பிரதமர் கையால் விருது வழங்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**குடிநீர் தரம் பரிசோதனை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஜல் ஜீவன் திட்டம் துவங்கியபின், புதிதாக 1.16 லட்சம் இணைப்புகள் கொடுக்கப்பட்டு, மொத்தம் உள்ள 2.15 லட்சம் வீடுகளுக்கு முழுவதுமாக குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 2022 ஆகஸ்ட் மாதம் இறுதியில் இத்திட்டப்பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ளன. இதுமட்டுமல்லாமல், குடிநீரின் தரத்தை பரிசோதனை செய்ய, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

**அனைத்து வீடுகளுக்கும் குடிநீர்**

இவர்கள், அவ்வப்போது குடிநீரின் தரத்தை பரிசோதனை செய்கின்றனர். கிராம அளவிலான குடிநீர் மற்றும் சுகாதார கண்காணிப்பு குழுவை மாவட்ட நிர்வாகம் ஏற்படுத்தியுள்ளது. இக்குழு, அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் செல்வதை கண்காணிக்க வேண்டும். பைப் லைன் பழுது, சீரமைத்தல் உள்ளிட்டவற்றை செய்ய இக்குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விருது பெற்ற காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியருக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

- ராதிகா S



இன்று (21.04.2023) மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள், புதுடெல்லியில் நடைபெற்ற PM AWARDS For Excellence in Public Administration 2022 நிகழ்வில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிராமப்புற வீடுகளுக்கு "ஜல் ஜீவன்" திட்டத்தின் கீழ் 100 சதவீதம் குடிநீர் இணைப்பு வழங்கியதற்காக மத்திய அரசின் "பிரதமர் விருது" மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மா.ஆர்த்தி, இ.ஆ.ப., அவர்களுக்கு வழங்கினார்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் மரு.மா.ஆர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் சந்தித்து, ஜல்ஜீவன் திட்டத்தினை காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தியதற்காக புதுதில்லியில் 21.4.2023 அன்று நடைபெற்ற தேசிய குடிமைப் பணிகள் நாள் விழாவில் வழங்கப்பட்ட பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்கியதற்கான பிரதமர் விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

# காதி ஒவ்வொரு நாளும் புதிய சாதனைகளை உருவாக்குகிறது: பிரதமர்

நாட்டு மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்துள்ள காதி ஒவ்வொரு நாளும் புதிய சாதனைகளை உருவாக்குகிறது என்றும் வேலைவாய்ப்புகளை ஊக்குவிப்பதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குறு, சிறு நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு நாராயண் ரானே வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், காதி கிராமத் தொழில்துறை, கலைஞர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்களது வருவாயைப் பெருக்குவதில் முக்கிய பங்காற்றுவதாக கூறியுள்ளார்.

2022 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 2023 ஜனவரி 31-ம் தேதி வரையிலான காலக்கட்டத்தில், காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையம், 77,887.97 கோடிக்கு உற்பத்தி செய்து ரூ.10,8571.84 கோடிக்கு விற்பனை செய்துள்ளதாகவும் 1.72 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்கியிருப்பதாகவும் அவர் மேலும் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.




குறு, சிறு நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சரின் இந்தப் பதிவுக்கு பதிலளிக்கும் வகையில், பிரதமர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

"இந்தச் சாதனைகள் உற்சாகம் அளிக்கும் வகையில் உள்ளன! காதி, மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்து ஒவ்வொரு நாளும் புதிய சாதனைகளை உருவாக்குவதுடன் வேலைவாய்ப்பையும் ஊக்குவிக்கிறது."

# மாணவி நந்தினிக்கு தேவையான உதவிகளை அரசு செய்யும்: முதல்வர் ஸ்டாலின்



பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவி நந்தினிக்கு, சாக்லேட் கூடையை பரிசளித்து முதல்வர் ஸ்டாலின் நேரில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

டெய்ரி மில்க், ஸ்னிக்கர்ஸ், ஹெர்ஷிஸ், உட்பட இன்னும் வகை வகையான விலை உயர்ந்த சாக்லேட்கள் ஸ்டாலின் கொடுத்த பரிசுக்கூடையில் இடம்பெற்றிருந்தன.

பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற திண்டுக்கல் அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி நந்தினி, முதலமைச்சர் ஸ்டாலினை அவரது முகாம் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

பள்ளிக்கல்வித்துறையால் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு முடிவுகள் *08.05.2023* அன்று வெளியிடப்பட்டது. இத்தேர்வில் மாநிலம் முழுவதும் *94.03* சதவிகிதம் மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவிகள் *96.38* சதவிகிதமும், மாணவர்கள் *91.45* சதவிகிதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்நிலையில் திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு பயின்ற வணிகவியல் மாணவி நந்தினி, அனைத்து பாடங்களிலும் முழு மதிப்பெண்ணான *600*–க்கு *600* மதிப்பெண் பெற்று மாநில அளவில் முதல் இடம் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளார். இந்நிலையில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, உடனடியாக மாணவி நந்தினியை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசி தனது வாழ்த்தை பகிர்ந்துகொண்டார்.

அதேபோல் திண்டுக்கல்லில் உள்ள தனது இல்லத்துக்கு அழைத்து மாணவி நந்தினிக்கு பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்திருந்தார் அமைச்சர் ஐ.பெரியசாமி. இதனிடையே மாணவி நந்தினியுடனான சந்திப்பின் போது, உயர்கல்வி பயில்வதற்கு தேவையான அனைத்து உதவிகளும் அரசின் சார்பில் செய்யப்படும் என்ற உறுதியை முதல்வர் வழங்கினார்.

- B. நவின்குமார்



# ஆப்ரேஷன் கஞ்சா வேட்டை 4.0

## DGP அதிரடி...

கஞ்சா வியாபாரிகள் மீதான நடவடிக்கையைத் தீவிரப்படுத்த வேண்டும் என போலீஸ் அதிகாரிகளுக்கு டிஜிபி சைலேந்திரபாபு உத்தரவிட்டுள்ளார்.

போதைப் பொருட்கள் இல்லாத மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்று தமிழக காவல் துறைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதன்படி கடந்த 6.12.2021 முதல் 31.12.2022 வரை 3 கட்டங்களாக ஆபரேஷன் கஞ்சா வேட்டையை போலீஸார் நடத்தினார்கள். இதில் தமிழகம் முழுவதும் 47 ஆயிரத்து 248 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கஞ்சா விற்பனை தொடர்பாக 20 ஆயிரத்து 14 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 25 ஆயிரத்து 721 கஞ்சா வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 5 ஆயிரத்து 723 பேரின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. எனினும் கஞ்சாவிற்பனை முற்றிலும் ஒழியவில்லை.இந்நிலையில் ஆபரேஷன் கஞ்சா வேட்டை 4.0 நடவடிக்கையை போலீஸார் கையில் எடுத்துள்ளனர்.

தாம்பரம் காவல் ஆணையர் எல்லைக்கு உட்பட்ட குன்றத்தூரில் போலீஸார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். இதில் ரூ.1 கோடி மதிப்பிலான 22 டன் குட்கா புகையிலை பொருட்கள் சிக்கின. இதைக் கடத்தி வந்த 3மினி லாரி, 4 மினி ஆட்டோ ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. கடத்தலில் ஈடுபட்டவர்கள் போலீஸாரை கண்டதும் தப்பி ஓடிவிட்டனர். அவர்களைக் கைது செய்யத் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.

ரகசியம் காக்கப்படும்: இந்நிலையில் கஞ்சா பதுக்கல்மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீதான நடவடிக்கையைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று அனைத்து மாவட்ட எஸ்பிக்கள், காவல் ஆணையர்களுக்கு டிஜிபி. சைலேந்திரபாபு அறிவுறுத்தி உள்ளார்.

கஞ்சா விற்பனை தொடர்பான தகவல் கிடைத்தால் 044 28447701 என்ற தொலைபேசி எண் மூலமாகவும், tndgpcontrolroom@gmail.com என்ற இ-மெயில் மூலமாகவும் பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம் என்றும், தகவல் தெரிவிப்பவர்களின் விவரம் ரகசியமாக வைக்கப்பட்டு அவர்களுக்குத் தக்க வெகுமதி வழங்கப்படும் என்றும் டிஜிபி சைலேந்திரபாபு கூறியுள்ளார்.

- அன்புமணி

# தூத்துக்குடி: மனுக்கள் எழுதிக்கொடுக்க இலவச வசதி! ஆட்சியர் முன்னெடுத்த முயற்சிக்கு வரவேற்பு!



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை நடைபெறும் மக்கள் குறைதீர் கூட்டத்திலும், பிற நாள்களிலும் பொதுமக்களிடமிருந்து இலவச வீட்டுமனைப்பட்டா, கல்வி உதவித்தொகை, பட்டாமாறுதல் உத்தரவு, தொழில் கடன், முதியோர் உதவித்தொகை, கணவரை இழந்த பெண்ணுக்கான உதவித்தொகை என மனுக்கள் அளிக்கப்பட்டுவருகின்றன.

பெரும்பாலானவர்கள் ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மரத்தடிகளில் அமர்ந்து மனுக்களை எழுதிக்கொடுப்பவர்களிடம் பணம் கொடுத்து மனுக்களைப் பெற்று ஆட்சியர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கொடுத்துவருகின்றனர்.

மனு எழுதுபவரிடம் பேசிய ஆட்சியர் செந்தில்ராஜ்

இந்த நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்பு ஆட்சியர் டாக்டர்.செந்தில்ராஜ், ஒரு வயதான தம்பதி `முதியோர் உதவித்தொகை' கேட்டு ஆட்சியரிடம் மனு கொடுத்தனர். மனுவில் கையெழுத்துக்கு பதிலாக கைநாட்டு வைத்திருந்தனர். "எங்கிருந்து வர்றீங்க... மனு யாரு எழுதிக் கொடுத்தாங்க... எவ்வளவு கொடுத்தீங்க?" எனக் கேட்க, "நாங்க திருச்செந்தூர் அருகிலுள்ள நாலுமூலைக்கிணறு பகுதியிலிருந்து ரெண்டு பஸ் மாறி வர்றோமுங்க. ரெண்டு பேருக்கும் வந்து போகுற பஸ் சார்ஜ் 150 ரூபா. ஆனா மனு எழுத 50 ரூபா கொடுத்தோம்" எனக் கூறினர்.

உடனே, ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மனு எழுதிக் கொடுத்தவர்களை நோக்கிச் சென்றவர், "மனு எழுதிக் கொடுக்க இனிமேல் யாருகிட்டயும் பணம் வாங்கக் கூடாது. பைக் செட் அருகில் உங்களுக்கு இடம் ஒதுக்கித் தருகிறேன். உங்களுக்கு ஊதியமாகக் குறிப்பிட்ட தொகை, ஆட்சியரின் விருப்பநிதியிலிருந்து வழங்குகிறேன்" என்றார். இதைக் கண்காணிக்க இரண்டு வருவாய் ஊழியர்களையும், பாதுகாப்புக்கு ஒரு காவலரையும் நியமித்திருக்கிறார். இந்த நிலையில், ஆட்சியர் செந்தில்ராஜ் கூறியது போன்றே, ஆட்சியர் அலுவலகத்துக்கு






எதிரேயிருக்கும் பைக் செட்டில் 12 மேஜை, நாற்காலிகள் போடப்பட்டு மனு எழுதுவதற்கு வசதி செய்துகொடுக்கப்பட்டிருக்கிறது.

குடிநீர் வசதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மனு எழுத வரும் பொதுமக்கள் வரிசையில் நின்று மனுக்களை எழுதி வாங்கி ஆட்சியர், அதிகாரிகளிடம் கொடுத்துவருகின்றனர். இது குறித்து ஆட்சியர் செந்தில்ராஜ், “திங்கட்கிழமை மக்கள் குறைதீர் கூட்டம், மீனவர்கள் குறைதீர் கூட்டம், விவசாயிகள் குறைதீர் கூட்டம் தவிர பிற நாள்களிலும் பொதுமக்கள் மனுக்களை அளிக்க வருகை தருகிறார்கள்.

இவர்கள் மரத்தடியில் அமர்ந்து மனுக்களை எழுதிக் கொடுப்பவர்களிடம் மனுக்களை எழுதச் சொல்லி வாங்குகின்றனர். இதற்காக ரூ.30 முதல் ரூ.50 வரை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. வயதான தம்பதியிடம் விசாரித்தபோது ரூ.50 கட்டணமாகக் கொடுத்ததாகச் சொன்னார்கள். இதனால், மனு எழுதிக் கொடுப்பவர்களை நானே நேரில் சந்தித்தேன். மனு எழுதிக்கொடுப்பதில் கிடைக்கும் வருமானம் மூலம்தான் எங்களின் வாழ்வாதாரமும் இருக்கிறது எனச் சொன்னார்கள்.

அவர்களின் நலனையும் கருத்தில்கொண்டு அவர்களுக்கு மனு எழுதிக்கொடுப்பதற்காக குறிப்பிட்ட தொகையை எனது விருப்ப நிதியிலிருந்து கொடுப்பதாகச் சொன்னேன். மனு எழுதிக் கொடுக்கும் 12 பேரும் இதற்குச் சம்மதித்தார்கள். இனி ஆட்சியர் அலுவலகத்தில் மனு எழுதிக் கொடுப்பதற்கு எந்தவிதக் கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது” என்றார். மாவட்ட ஆட்சியரின் இந்த ஏற்பாட்டை பொதுமக்கள் பாராட்டினர்.

- A. **தங்கராஜ்**

# 1000 ஆண்டுகளுக்குமேல் பழமை வாய்ந்த சிவலிங்கம்!
## தியானத்தின் மூலம் முள் புதர்களிலிருந்து கண்டெடுப்பு:

# அற்புதங்கள் நிகழ்த்தும் சித்தர் சிவானந்த அம்மையார்!





திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே கீழ்கருமனூர் என்னும் கிராமத்தில், சுமார் 1000 ஆண்டுகளுக்கு மேலாக பழமை வாய்ந்த சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சிலை அமைந்துள்ள அருகில் குளம் உள்ளது. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் மக்கள் இங்கு வழிபட்டு வந்ததும், காலப்போக்கில் அங்குள்ள மக்கள் குடிபெயர்ந்ததால் இக்கோவில் பராமரிப்பின்றி சிதிலமடைந்து மண்ணில் புதையுண்டுள்ளது. பிறகு மூன்று தலைமுறையாக யாருக்கும் இந்த கோவில் தெரியாமல் இருந்துள்ளது.

கடந்த 2022–ம் ஆண்டு ஒரு அதிசயம் நிகழ்ந்தது. கீழ்கருமனூர் ஊரைச் சேர்ந்த ஒரு பெண்ணின் உறவினர் வீட்டில் நகைகள் திருடு போனதாக சிவானந்த அம்மையாரிடம் நாடினர். அந்த ஊரைப் பற்றியே அறிந்திடாத அம்மையார் அவர்கள் தன் தியானத்தின் மூலம் நகைகளை திருடியவர்களின் அங்க அடையாளங்களை துள்ளியமாக குறிப்பிட்டு, ஒரு நபரைப் பற்றி அம்மையார் சொன்னதை வைத்து நகைகளை திரும்ப பெற்றனர்.

அவர்களிடன் எந்த ஒரு பணமோ, பொருளோ வாங்காமல் இலவசமாக தன் தியானத்தின் மூலம் செய்துள்ளார் சிவானந்த அம்மையார். இதைப் போன்று இன்னும் பல அற்புதங்களை செய்திருக்கிறார். இதேபோன்று, பழமை வாய்ந்த சிலை திருட்டை ஒரே நாளில் கண்டுபிடித்து சொல்லியிருக்கிறார் சித்தர் சிவானந்த அம்மையார்.





நகைகள் திருட்டு சம்பந்தமாக அம்மையாரின் தியானத்தின் போதுதான் கீழ்கருமனூர் கிராமத்தில், யாரும் கண்டுகொள்ளாமல் மண்ணில் புதைந்து, ஒரு சிவலிங்கம் இருப்பது தெரியவந்தது.

இந்த ஊரைச் சுற்றி இருக்கக்கூடிய நான்கு கிராமங்களான மேட்டூர் காலனி, பள்ளக்காலனி ஆச்சாரி கண்டிகை, தலையாரி பாளையம் உள்பட சுற்றுவட்டார கிராமத்தில் சுமார் *2000*க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் பகுதிக்கு, இந்த சிவன் கோயில் மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமையும் என சித்தர் சிவானந்த அம்மையார் கூறினார்.

மேலும் இந்த கோவிலுக்கு மங்களேஸ்வரர் – மங்கலம்பிகை எழுந்தருளியுள்ள முக்கிய சிவன் கோயில் தளமாக்கப்பட வேண்டும் என்ற முயற்சியில், பல முக்கிய பிரமுகர்களையும், ஆன்மீக பற்றாளர்களையும், சிவ பக்தர்களையும் நேரடியாக சந்தித்து இப்பகுதிக்கு சிவன் கோயில் அவசியம் என்பதும், மறைக்கப்பட்ட தடயங்கள் வெளிக்கொண்டுவர இதுவே தக்க தருணம் என்றும் எடுத்துக் கூறியுள்ளார் திருமதி பேச்சியம்மாள் என்னும் சித்தர் சிவானந்த அம்மையார்.




அம்மையார் அவர்கள், "இந்த இடம் கோபுரத்துடன் கூடிய சிவன் கோவில் உருவாக்க வேண்டும் என்ற முயற்சியில் முழுமையாக அம்மையாரின் கணவரின் ஒத்துழைபோடு தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்.

மேலும், *05.05.2023*, வெள்ளிக்கிழமை, சித்ரா பவுர்ணமி அன்று மங்களாம்பிகை உடன் உறை மங்கள ஈஸ்வரர்–க்கு "பௌர்ணமி பூஜை" மிக சிறப்பாக நடைபெற்றது.



மாலை *4.30 – 5.00* மணியளவில் கரும்பாத்தம்மன் ஆலயத்திலிருந்து பால்குடம் எடுத்து வீதி உலா நடைபெற்றது. கொட்டும் மழையிலும் அம்மையாருடன் பக்த்தர்கள் பால் குடம் ஏந்தி வீதி உலா வந்தனர். மாலை *5.30–6.30* மணியளவில் சிவனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், அதனைத் தொடர்ந்து மாலை *7.30* மணியளவில் திருவிளக்கு பூஜையும் பிறகு, அன்னதானம் நடைபெற்றது.

- நா வீ சிவசங்கர்

# சென்னையில் 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் சுரங்கம் தோண்டும் 17 இயந்திரம்

## ஜூலைக்குள் தயார்





சென்னையில் 2-ம் கட்ட மெட்ரோ ரயில்திட்டத்தில் சுரங்கம் துளையிடும் பணியில் மொத்தம் 23 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

இதில் தலா ரூ.80கோடி என 19 இயந்திரங்கள் வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஜூலைக்குள் 17 இயந்திரங்கள் தயாராகிவிடும் என்று மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னையில் 2–ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் ரூ.63,246 கோடி மதிப்பில்118.9 கி.மீ. தூரத்துக்கு செயல்படுத்தப்படுகிறது. மாதவரம்–சிறுசேரி சிப்காட், கலங்கரை விளக்கம்–பூந்தமல்லி, மாதவரம்–சோழிங்கநல்லூர் ஆகிய 3 வழித்தடங்களில் மொத்தம் 128 ரயில் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

இதில்மொத்தம் 42.6 கி.மீ. தூரத்துக்கு சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது. பணிகளை 2026–ம் ஆண்டுக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது, 40–க்கும் மேற்பட்ட இடங்களில் உயர்மட்டப் பாதை, சுரங்கப்பாதை அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. குறிப்பாக, 3–வது வழித்தடத்தில் மாதவரம் பால் பண்ணை அருகே சுரங்கம் தோண்டும் பணி கடந்த ஆண்டு அக்.13–ம் தேதி தொடங்கியது.

மாதவரம் பால் பண்ணை முதல் மாதவரம் நெடுஞ்சாலை வரை சுரங்கம் தோண்டும் பணியில் 2 இயந்திரங்கள் ஈடுபட்டுள்ளன. இதில் முதலாவது இயந்திரம் ‘நீலகிரி’, மொத்த நீளம் 1,400 மீட்டரில் 710 மீட்டர் நீளத்தையும், 2–வது இயந்திரம் ‘பொதிகை’, மொத்த நீளம் 1,400 மீட்டரில் 260 மீட்டர் நீளத்தையும் கடந்துள்ளன.

மாதவரம் பால் பண்ணையில் இருந்துவேணுகோபால் நகர் மெட்ரோ வரையிலான சுரங்கம் தோண்டும் 3–வது இயந்திரம் ‘ஆனைமலை’, மொத்த நீளம் 400 மீட்டரில் 110 மீட்டர் நீளத்தை கடந்துள்ளது. இங்கு சுரங்கம் தோண்ட 4–வது இயந்திரமும் பயன்படுத்தப்பட உள்ளது.

இதே வழித்தடத்தில் பசுமை வழிச்சாலை பகுதியில் 1.226 கி.மீ. தொலைவுக்கு சுரங்கம் தோண்டும் பணி கடந்தபிப்.16–ம் தேதி தொடங்கியது. இதில் முதல் இயந்திரமான ‘காவேரி’, டிபி சாலைக்கு கீழே சுரங்கப்பாதை அமைத்து,திருவிக பாலம் அருகே அடையாறு ஆற்றை கடந்து அடையாறு சந்திப்புநிலையத்துக்கு ஆகஸ்டில் சென்றடையும். இந்த இயந்திரம்

இதுவரை60 மீட்டரை கடந்துள்ளது. இங்கு பயன்படுத்தப்படும் 2-வது இயந்திரத்துக்கு 'அடையாறு' என்று பெயரிடப்பட்டுள்ளது.

கெல்லிஸ்-தரமணி இடையே சுரங்கம் தோண்ட 8 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. இவை ஜெர்மனியின் ஹெர்ரென்க்னெக்ட் நிறுவன தயாரிப்பாகும்.

இந்த வழித்தடத்தில் சேத்துப்பட்டு-ஸ்டெர்லிங் சாலை இடையே சுரங்கம் தோண்டும் பணியில் 'சிறுவாணி', 'பாலாறு'என்ற 2 இயந்திரங்களும், அயனாவரம்-பெரம்பூர் மற்றும் ஓட்டேரி வரை 3 இயந்திரங்களும் பயன்படுத்தப்பட உள்ளன. 3-வது வழித்தடத்தில் பயன்படுத்தப்பட உள்ள 15 இயந்திரங்களில், 13 இயந்திரங்கள் வந்துவிட்டன. மற்ற 2 இயந்திரங்களும் விரைவில் தயாராகிவிடும்.

கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி 4-வது வழித்தடத்தில் சுரங்கம் தோண்ட 4 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. இரண்டு இயந்திரங்கள் ஜூலைக்குள் கலங்கரை விளக்கத்தில் அணிவகுத்து நிற்கும். வரும் ஜூலைக்குள் 17 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பணி நடைபெறும் இடத்தில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியபோது, ''2-ம்கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் சுரங்கம் துளையிடும் பணியில் மொத்தம் 23 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. இதில் 19 இயந்திரங்கள் வாங்க ஒப்பந்தம்செய்யப்பட்டுள்ளது. ஒரு இயந்திரத்துக்கு சுமார் ரூ.80 கோடி செலவிடப்படுகிறது.

ஜூலைக்குள் 17 இயந்திரங்கள் வந்துவிடும். 4-வது வழித்தடத்தில், 4 இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. 2 இயந்திரங்கள் ஜூலையிலும், மீதம் இரண்டுஇயந்திரங்கள் இந்தாண்டு இறுதியிலும் தயாராகிவிடும். 5-வது வழித்தடத்தில் 5.8 கி.மீ. தூர சுரங்கப் பணிக்காக 4 இயந்திரங்கள் வாங்கப்பட உள்ளன. இதற்கு 2 மாதத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்'' என்றனர்.

- B. சரவணன்

# உதவும் உள்ளம் கொண்ட உதவி ஆய்வாளர்



திருவள்ளூர் மாவட்டம் பென்னாலூர்பேட்டை காவல்நிலையத்தில் பணிபுரிந்து வரும் பயிற்சி காவல் உதவி ஆய்வாளர் திரு.எம். பரமசிவம் அவர்கள் பென்னாலூர்பேட்டை மலைவாழ் மக்களிடம் குழந்தைகள் அனைவரும் படிக்க வேண்டும், அவர்கள் பள்ளிக்கு செல்லவேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி காவல்துறைக்கு பொதுமக்கள் மத்தியில் நன்மதிப்பை ஏற்படுத்தியதற்காக அவரை பாராட்டும் வகையில் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குனர் முனைவர் செ. சைலேந்திரபாபு, இ. கா. ப., அவர்கள் டிஜிபி அலுவலகத்திற்கு நேரில் அழைத்து பணம் வெகுமதி மற்றும் நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்கள்.

# ஆபரேஷன் காவேரி




சூடான் உள்நாட்டுப் போரில் சிக்கிக்கொண்ட மூவாயிரத்துக்கும் அதிகமான இந்தியர்களை மீட்கும் பணி வெற்றியடைந்திருப்பது உலக நாடுகள் மத்தியில் இந்தியாவின் மரியாதையை மேலும் உயர்ந்திருக்கிறது. கடந்த 15 நாள்களில் “ஆபரேஷன் காவேரி’யை வெற்றிகரமாக நடத்தியதில் இந்திய விமானப் படையும், கடற்படையும் பெரும்பங்கு வகிக்கின்றன.

சூடானில் மோதலில் ஈடுபட்டிருக்கும் படைகளுக்கு இடையே, ஏப்ரல் 24–ஆம் தேதி அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தத்தை முழுமையாகப் பயன்படுத்தி இந்தியர்களை பாதுகாப்பாக அழைத்து வந்திருக்கிறது மத்திய அரசு. மே 1–ஆம் தேதிக்குள் ஏறத்தாழ 3,400 இந்தியர்கள் நாடு திரும்பியிருக்கின்றனர் அல்லது பாதுகாப்பான இடத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றனர். இந்தியர்களில் பலர் தங்களது பயண ஆவணங்களை வீட்டில் வைத்துவிட்டு வெளியேறியதால், அவர்களை அழைத்து வருவதில் பல பிரச்னைகள் இருந்தன. தலைநகர் கார்ட்டூமிலிருந்து துறைமுக நகரமான போர்ட் ஆஃப் சூடான் 850 கி.மீ. தொலைவு என்பதாலும் காலதாமதம் ஏற்பட்டது.

சூடானில் இருந்த 3,400 இந்தியர்களில் ஏறத்தாழ 1,000 பேர் இந்திய வம்சாவளியினர். 100 ஆண்டுகளுக்கு முன்பு குடியேறி சூடான் குடிமக்களாகிவிட்ட அந்த இந்தியர்கள் தாய்நாடு திரும்பியபோது அவர்களையும் தாயுள்ளத்துடன் அழைத்து வந்திருப்பது வரவேற்புக்குரியது.

கடந்த இரண்டு வாரங்களாக ஏறத்தாழ 55 லட்சம் மக்கள் வாழும் சூடானின் தலைநகரான கார்ட்டூம், சொல்லொணா அழிவை எதிர்கொள்கிறது. வான்வழித் தாக்குதல்களாலும் தெருவில் நடக்கும் மோதல்களாலும் வெடிகுண்டு வீச்சுகளாலும் கலவர பூமியாக மாறியிருக்கிறது. ஐ.நா.வின் அதிகாரபூர்வ தகவலின்படி, 528 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 4,500–க்கும் அதிகமானோர் காயமடைந்திருக்கிறார்கள்.

ஆப்பிரிக்காவின் 3–ஆவது பெரிய

நாடான சூடானில் இதுபோன்ற வன்முறையும், குழப்பமும் ஏற்படுவது புதிதல்ல. ஆப்பிரிக்காவின் வடக்குப் பகுதியில் செங்கடலை ஒட்டிய நாடு சூடான். சுமார் நான்கரை கோடி மக்கள்தொகையுள்ள சூடானில் பெட்ரோலியம், தங்கம் உள்ளிட்ட கனிம வளங்கள் ஏராளம். ஆனால், மக்கள்தொகையில் 65% பேர் வறுமையின் கோரப்பிடியில் இருப்பவர்கள். 18.86 லட்சம் சதுர கி.மீ. நிலப்பரப்புள்ள மக்கள்தொகை குறைவாக இருக்கும் பாலைவன நாடு சூடான்.

19–ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய காலனிகளில் ஒன்றாக இருந்த சூடான், 1956–இல் பிரிட்டனிலிருந்து விடுதலை பெற்றது. அதைத் தொடர்ந்து ஆறு ராணுவப் புரட்சிகளை – 1958, 1969, 1985, 1989, 2019, 2021 ஆண்டுகளில் – சூடான் பார்த்துவிட்டது. அவையல்லாமல் 10 ராணுவப் புரட்சிகள் தோல்வியும் அடைந்திருக்கின்றன. 1964–இலும், 1985–இலும் ஜனநாயக முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன என்றாலும், அவற்றை ராணுவம் தடம்புரளச் செய்தது.

1989–இல் நடைபெற்ற ராணுவப் புரட்சியில் அதிகாரத்தைக் கைப்பற்றி 30 ஆண்டுகள் சூடானில் சர்வாதிகார ஆட்சி நடத்தியவர் கர்னல் ஒமர் அல் –பஷீர். அவரது பிரித்தாளும் தந்திரத்துக்காக உருவாக்கப்பட்டவர்கள்தான் இப்போது மோதலில் ஈடுபட்டிருக்கும் ஜெனரல் அப்தெல் ஃபட்டா அல்–புர்ஹானும், ஜெனரல் முகமது ஹம்தான் டகாலோவும்.

2018–இல் கர்னல் பஷீருக்கு எதிராக மக்கள் தெருவில் இறங்கிப் போராடியபோது, அவரை அகற்றிவிட்டு புர்ஹானும், டகாலோவும் ஓர் ஒப்பந்தத்தின் கீழ் 2019 ஏப்ரலில் ஆட்சியைக் கைப்பற்றினர். போராட்டத் தலைவர்களும் ராணுவமும் இணைந்து “சாவரின் கவுன்சில்’ என்கிற கூட்டமைப்பின் கீழ் ஆட்சி நடத்துவது என்று முடிவானது. ஜெனரல் புர்ஹான் கவுன்சிலின் தலைவர். டகாலோ அவருக்கு அடுத்தபடியான இடத்தில் பிரதமர். இந்த ஆண்டு ஜூலையில் தேர்தல் நடத்தப்படுவது வரை இந்த ஆட்சி தொடரும் என்பதுதான் ஒப்பந்தம்.

டகாலோவின் தலைமையில் இயங்கும் துணை ராணுவம், சூடான் ராணுவத்தில் உடனடியாக இணைய வேண்டும் என்பது புர்ஹானின் வற்புறுத்தல். ஆனால், அதற்கு டகாலோ தயாராக இல்லை. இதற்கு பின்னால் அந்நிய சக்திகளின் கரங்கள் காணப்படுகின்றன.

டகாலோவை ஐக்கிய அரபு அமீரகமும், ரஷியாவின் வாக்னர் எனப்படும் பெட்ரோலிய நிறுவனமும் ஆதரிக்கின்றன. சூடான் ராணுவத்துக்கு ரஷியாவின் மறைமுக ஆதரவு காணப்படுகிறது. ஜனநாயகம், சமாதானம், சூடானில் இயல்புநிலை என்றெல்லாம் வெளிநாடுகள் பேசுவதற்கு அந்த நாட்டில் உள்ள கனிம வளங்கள்தான் காரணம்.

பேச்சுவார்த்தைக்கு பிரதிநிதிகளை அனுப்ப இரு தளபதிகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக ஐ.நா. பிரதிநிதி தெரிவித்திருக்கிறார். பேச்சுவார்த்தை என்பது தங்களை வளப்படுத்திக் கொள்வதற்காகத்தானே தவிர, அமைதியை நிலைநாட்ட அல்ல என்பதை வரலாறு பலமுறை உணர்த்திவிட்டது. இதுபோன்ற பிரச்னைகளில் சர்வதேச அமைதிப் படையுடன் களமிறங்கி, உள்நாட்டுப் போர்களை முடிவுக்குக் கொண்டுவரும் துணிவும் அதிகாரமும் ஐ.நா.வுக்கு ஏற்படும் வரை இவற்றுக்கெல்லாம் தீர்வு கிடையாது.

ஏறத்தாழ 1.4 கோடி இந்தியர்கள் வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். ஆண்டுதோறும் ஏழு லட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து பல நாடுகளுக்குச் செல்கிறார்கள். உக்ரைன் போல, படிப்பதற்காகச் செல்லும் மாணவர்களும் ஏராளம்.

வெளியுறவுத் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரைப்படி, வெளிநாடுகளில் பிரச்னைகள் ஏற்படும்போது இந்தியர்களைக் காப்பாற்றி அழைத்து வருவதற்கான சிறப்புப் படையையும், செயல்பாட்டு நடைமுறையையும் உருவாக்க வேண்டியது அவசியம் என்பதை உக்ரைன், சூடான் அனுபவங்கள் உணர்த்துகின்றன.

- சரவணன் @ மணிகண்டன்

# பி.எப்., கணக்கிலிருந்து ரூ.1 லட்சம் எடுத்தால் ரூ.9 லட்சத்தை இழப்பீர்கள்! - எப்படி?



பி.எப்., எனும் வருங்கால வைப்பு நிதி சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு அவசரகாலத்தில் கைக்கொடுக்கும்.

நம்மை அறியாமல் நாம் தரும் சிறு தொகை காலப் போக்கில் பெரும் தொகையாக சேர்ந்திருக்கும். ஆனால் வீண் செலவுகளுக்காக பி.எப்., கணக்கில் இருந்து பணத்தை எடுத்தால் நீங்கள் இறுதியில் எவ்வளவு இழப்பீர்கள் என பார்ப்போம்.முன்னர் பி.எப்., கணக்கில் எவ்வளவு பணம் உள்ளது என்று பார்ப்பதே கடினம். மேலும் அதனை எடுக்க வேண்டுமெனில் மண்டல பி.எப்., அலுவலகம் சென்று விண்ணப்பிக்க வேண்டும். இன்று டிஜிட்டல் மயமானதால் யு.ஏ.என்., எண் கொண்டு அலைபேசியிலேயே பி.எப்., தொகை இருப்பு விவரங்களில் இருந்து, கிளைம் செய்வது வரை மேற்கொள்ள முடிகிறது.

இதனால் அதில் சேர்ந்திருக்கும் தொகையை பலர் ஆரம்பத்திலேயே தங்களது விருப்பச் செலவுகளுக்காக எடுத்துவிடுகின்றனர். மருத்துவத் தேவை போன்றவற்றிற்கு வேறு வழியின்றி பணம் எடுப்பது தவறில்லை. ஆனால் பைக் வாங்க, சுற்றுலா செல்ல, வீட்டுச் செலவுகளுக்கு என அதில் இருந்து பணத்தை எடுப்பது உங்களுக்கு நீண்ட கால அளவில் பல லட்சங்களை இழக்க வழி வகுக்கும். உங்களுக்கு 25 வயது என வைத்துக்கொள்வோம்.

உங்கள் பி.எப்., கணக்கில் வட்டியுடன் ரூ.1 லட்சம் சேர்ந்துள்ளது. குறைந்தது 30 ஆண்டுகள் வரை பி.எப்., தொகை பிடித்தம் செய்யப்படும். இந்த சமயத்தில் அந்த ஒரு லட்ச ரூபாயை நீங்கள் துடைத்து எடுத்துவிட்டு மீண்டும் பூஜ்ஜியத்திலிருந்து கணக்கைத் தொடங்கினால் உங்களின் 55 ஆவது வயதில் ரூ.11 லட்சத்தை இழந்திருப்பீர்கள். எப்படி என்றால், அது தான் கூட்டு வட்டியின் மகத்துவம்.

உங்களின் அடிப்படைச் சம்பளம் (Basic Pay) ரூ.15,000 எனக் கொள்வோம். இதில் ஊழியரான உங்கள் பங்கு 12% பி.எப்., கணக்கிற்கு செல்லும். நிறுவனம் 3.67% பணத்தை வழங்கும். ஆக மொத்தம் மாதம் ரூ.2,350 பி.எப்., ஆக செல்லும்.

தற்போது 8.15% வட்டி தருகிறார்கள். நாம் 8% என்றே ரவுண்ட் ஆப் செய்துகொள்வோம். ஏற்கனவே சேர்ந்த ஒரு லட்ச ரூபாயுடன், மாதம் தோறும் ரூ.2,350 என 30 ஆண்டுகளுக்கு சேரும் போது, 55 வயதில் ஒருவரின் கணக்கில் ரூ.43.4 லட்சம் இருக்கும். ரூ.9.46 லட்சம் சேமித்திருப்போம். அது கூட்டு வட்டியின் மூலம் ரூ.33.9 லட்சத்தை ஈட்டியிருக்கும்.இதுவே அந்த ரூ.1 லட்சத்தை எடுத்துவிட்டு, 30 ஆண்டுகளுக்கு மாதம் ரூ.2,350 மட்டும் செலுத்தப்பட்டால் ரூ.33.3 லட்சம் தான் இறுதியில் நம் கைக்கு கிடைக்கும். நீண்ட கால அளவில் ரூ.1 லட்சத்தை எடுப்பதால் கூட்டு வட்டியின் பலனை நாம் இழக்கிறோம். எனவே அவசர தேவை இருந்தால் ஒழிய பி.எப்., பணத்தில் கை வைக்காதீர்கள்.

- K. மாரிதுரை

# ஐடி ஊழியர்கள் வேலைக்கு ஆபத்தா சாட் ஜிபிடி?



மைக்ரோசாப்ட் மற்றும் கூகுள் போன்ற பெரிய நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு உருவாக்கும் கருவிகளில் (AI Generative Tools) அதிக அளவில் முதலீடு செய்கின்றன.

அமேசான், மெட்டா போன்ற நிறுவனங்களும் இதில் தான் கவனம் செலுத்துகின்றன. இந்த பட்டியலில் பிரபல ஐடி நிறுவனமான காக்னிசன்ட்டும் சமீபத்தில் இணைந்துள்ளது.

செயற்கை நுண்ணறிவால் வேலைகள் பறிபோகும் என்ற கவலைகள் நிலவி வரும் வேளையில், மென்பொருள் நிறுவனங்களின் இந்தத் திட்டங்கள் மேலும் குழப்பத்தை உருவாக்குகின்றன. சமீபத்தில் தனது பணியாளர்களை ஒரு சதவீதம் குறைப்பதாக அறிவித்த காக்னிசன்ட் நிறுவனம், தற்போது AI உருவாக்கும் கருவிகளில் முதலீடு செய்வதற்கான திட்டங்களை அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**செயற்கை நுண்ணறிவு கருவிகளில் முதலீடு**

முன்னணி தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனமான காக்னிசண்ட், ChatGPT போன்ற செயற்கை நுண்ணறிவு கருவிகளில் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனம் தனது ஊழியர்களின் வேலையை விரைவுபடுத்தவும், இறுதியில் அவர்களின் உற்பத்தித்திறனை இரட்டிப்பாக்கவும் திட்டமிட்டுள்ளது. இதனை நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரி ரவிக்குமார் உறுதிப்படுத்தினார். தற்போது, இந்த புதிய தொழில்நுட்பம் ஆலோசனை, வடிவமைப்பு, பொறியியல் மற்றும் செயல்பாடுகள் போன்ற பல்வேறு துறைகளில் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

**வாடிக்கையாளர்களுடன் கருத்தாய்வு அமர்வுகள்**

காக்னிசென்ட் நிறுவனத்தில் 'AI Accelerator' என்ற செயல்முறை உள்ளது என்றும் ரவிக்குமார் குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே அவர்கள் 30 வாடிக்கையாளர்களுடன் கருத்தாய்வு அமர்வுகளை நடத்தியுள்ளனர். இப்போது பொதுவான சவால்களுக்கான தீர்வுகளை கண்டறிந்து வருகிறார்கள்.

**3,500 ஆட்குறைப்பு**

காக்னிசன்ட் சமீபத்தில் 3,500 ஊழியர்களை அதாவது அதன் பணியாளர்களில் ஒரு சதவீதத்தை பணிநீக்கம் செய்வதை உறுதிப்படுத்தியது. இந்த பணிநீக்கங்கள் இரண்டு வருட மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாகும். பணிநீக்கச் செலவுகளை ஈடுகட்ட 200 மில்லியன் டாலர் (சுமார் ரூ. 1,498 கோடி) செலவழிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**செலவுகளைக் குறைக்க காக்னிசண்ட் அலுவலகங்களை மூடுகிறது**

நிறுவனம் சில அலுவலகங்களை மூடிவிட்டு, அதன் மூலம் செலவுகளைக் குறைக்க திட்டமிட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள அனைத்து நிறுவனங்களின் பணியாளர்களில் 10–15 சதவீதம் பேர் மட்டுமே அலுவலகங்களுக்கு வருகிறார்கள். இந்திய ஐடி ஊழியர்களில் 30–40 சதவீதம் பேர் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தங்கி, அலுவலகங்களுக்கு வராமல் வேலை செய்கிறார்கள்.

- K. கலைமணி

# பொன்னியின் செல்வன் 2




இலங்கையில் இருந்து தஞ்சை வரும் வழியில் அருண்மொழி வர்மனான பொன்னியின் செல்வனும் (ஜெயம் ரவி), வந்தியத்தேவனும் (கார்த்தி) கடலில் மூழ்க, ஊமை ராணியின் ஆச்சரிய அறிமுகத்துடன் முதல்பாகத்தை முடித்திருப்பார் இயக்குநர் மணிரத்னம்.

இரண்டாம் பாகத்தில், பொன்னியின் செல்வனை ஊமை ராணி காப்பாற்றுகிறார். இன்னொரு பக்கம் சோழர் குலத்தை அழிக்க பாண்டிய ஆபத்துதவிகளோடு இணைந்து சூழ்ச்சியில் இறங்குகிறார் நந்தினி (ஐஸ்வர்யா ராய்). அச்சூழ்ச்சி அறிந்தும் நந்தினியைத் தேடிச் செல்லும் ஆதித்த கரிகாலன் (விக்ரம்), கொல்லப்படுகிறார். அவரைக் கொன்றது யார்? வந்தியதேவன் மீது குந்தவை (த்ரிஷா) கொண்ட காதல் என்னவானது? உண்மையில் நந்தினி யார்? பொன்னியின் செல்வனைக் காப்பாற்றிய ஊமை ராணி யார்? என்பது போன்ற பல்வேறு கேள்விகளுக்கு விடை சொல்கிறது மீதி கதை.

கேரக்டர் அறிமுகம் என்கிற அளவில் பெரும் பிரம்மாண்டம் காட்டியிருந்தது முதல் பாகம். இரண்டாம் பாகம், அழுத்தமானக் கதையை ஆழமாகக் கொண்டிருப்பதால் அதற்கான, மணிரத்னம் டீமின் மெனக்கெடலையும் நடிகர், நடிகைகளின் உழைப்பையும் மொத்தமாகத் தாங்கி நிற்கிறது படம்.

விரிவாகவும் நிதானமாகவும் கதை சொல்லலாம் என்ற தீர்மானத்துடன் மணிரத்னம், ஜெயமோகன், இளங்கோ குமரவேல் கூட்டணி திரைக்கதை அமைத்திருப்பதாகத் தெரிகிறது. இதனால் சில இடங்களில் மெதுவாக நகரும் உணர்வு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. இருந்தாலும் கதையையும் கதாபாத்திர உணர்வுகளையும் பார்வையாளர்கள் முழுமையாக உள்வாங்க வேண்டும் என்பதற்கு கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம் பாராட்டுக்குரியது.

நாவலில் தகவல்களாக மட்டுமே சொல்லப்படும் ஆதித்த கரிகாலனுக்கும் நந்தினிக்கும் இடையிலான பதின்பருவக் காதலை, அழகான காட்சிகளாக்கி

படத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். சோழர் குலத்தைப் பழிவாங்குவதில் நந்தினிக்கு இருக்கும் வன்மமும், பிற்பகுதியில் கடம்பூர் அரண்மனையில் ஆதித்த கரிகாலனுக்கும், நந்தினிக்கும் இடையிலான உணர்ச்சிப் பரிமாற்றம் வலுவானத் தாக்கம் செலுத்துவதற்கும் இக்காட்சிகள் உதவி யிருக்கின்றன.

வந்தியத்தேவன் - குந்தவை காதல் காட்சிகள் மணிரத்னத்தின் இளமை, துளியும் குறையவில்லை என்பதை அழகாக உணர்த்துகின்றன. வந்தியத்தேவன் சிறைபிடிக்கப்பட்டு கண்ணைக் கட்டி வைத்திருக்கும்போது, குந்தவை சந்திக்கும் காட்சியும் அதைத் தொடர்ந்து வரும் ‘அக நக’ பாடலும் மிகச்சிறந்த காதல் காட்சிகளில் ஒன்றாக இடம் பிடிக்கும். அது நிகழும் இடம், சூழல், கேமரா கோணம் என அனைத்தும் சிலிர்க்கும் அனுபவம்.

கல்கி கதையில் இல்லாத பல விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவர் சொல்லாமல் விட்ட தகவல்களை, சோழர் வரலாற்றுத் தகவல்களின் துணைகொண்டு நிரப்ப முயன்றிருக்கிறார்கள். கற்பனைக் காட்சிகளையும் சேர்த்திருக்கிறார்கள். கதையின் தொடர்ச்சி விடுபடாமல் இருப்பதற்கு இந்த உத்தியைப் பயன்படுத்தியிருப்பதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் ‘பொன்னியின் செல்வன்’ நாவலை அப்படியே எதிர்பார்த்துச் செல்பவர்களுக்கு இந்த மாற்றங்கள் ஏமாற்றம் அளிக்கலாம்.

கதையில் கொஞ்சம் தொய்வை உணரும்போது வந்தியத்தேவன் - ஆழ்வார்க்கடியான் உரையாடல் வழியாக நகைச்சுவையைத் தூவியிருப்பதும் ஆதித்தகரிகாலன், அருண்மொழி வர்மன், நந்தினி ஆகியோரின் ஆளுமையை வெளிப்படுத்தும் மாஸ் காட்சிகளும் கைதட்டல்களைப் பெறுகின்றன. நாவலில் இல்லாத ராஷ்ட்ரகூடர்களுடனான இறுதிப் போர்க்காட்சி, ‘பாகுபலி’ பாதிப்பில் வைக்கப்பட்டிருப்பதாகவே உணர முடிகிறது. இறுதியில் யார் மணிமுடி ஏற்கிறார் என்பதையும் நாவலிலிருந்து சற்று மாறுபட்டும் வரலாற்றுக்கு நெருக்கமாகவும் அமைந்திருக்கிறார்கள்.

ஆதித்த கரிகாலனின் வீரத்தையும் விரக்தியையும் கண்களிலேயே அசாத்தியமாக வெளிப்படுத்தியிருக்கிறார் விக்ரம். நந்தினியுடன் உணர்ச்சிகரமான நீண்ட உரையாடலை நிகழ்த்தும் அந்தக் காட்சி, விக்ரம் தமிழ் சினிமாவின் தலைசிறந்த நடிகர்களில் ஒருவர் என்று உணர வைக்கிறது.

யாரையும் மயக்கிவிடும் நந்தினியின் அழகையும் மனதின் ஆழத்தில் அவள் தேக்கி வைத்திருக்கும் வன்மத்தையும் அதைத் தாண்டி அவளுக்குள் இருக்கும் காதலையும் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார் ஐஸ்வர்யா ராய். கார்த்தி, ஜெயம் ரவி, த்ரிஷா, பிரகாஷ் ராஜ், ஜெயராம், ரகுமான், சரத்குமார், பார்த்திபன், விக்ரம் பிரபு ஆகியோர் தங்கள் கதாபாத்திரத்தைச் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஜெயமோகனின் வசனங்கள் கதைக்குப் பொருத்தமாக இருக்கின்றன. ஏ.ஆர்.ரகுமான் பாடல்கள் அளவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. முதல் பாகத்துக்கு மாறாக கூடுதல் இந்திய செவ்வியல் தன்மையுடன் அமைந்திருக்கிறது பின்னணி இசை. ஒளிப்பதிவாளர் ரவிவர்மன், கலை இயக்குநர் தோட்டா தரணி இருவரும் மணிரத்னத்தின் கனவை நனவாக்க இரு கரங்களாகச் செயல்பட்டிருக்கிறார்கள்.

மெதுவாக நகரும் இரண்டாம் பாதியை மட்டும் பொறுத்துக்கொண்டால் மிகச் சிறந்த காட்சி அனுபவத்துடன் கூடிய வரலாற்றுப் புனைவுத் திரைப்படத்தை ரசிக்கலாம். மணிரத்னத்தின் நெடிய திரைப்பயணத்தில் இந்தப் படம் மைல் கல் என்பதில் ஐயமில்லை.

- P. கார்த்திகேயன்

# மீன் வளர்ப்பில் புதிய நுட்பம்... மதுரைத் தமிழனின் சாதனை!

ஒரு பத்தடி உயரத் தொட்டி இருந்தது. அதில் எட்டடிக்குத் தண்ணீர் நிரப்பி மீன் வளர்த்து வந்தனர். அந்த வகை மீன்கள் வளிமண்டல காற்றை நேரடியாகச் சுவாசிப்பவை.

அதனால் அவை நீரின் மேல் பரப்புக்கு அடிக்கடி வந்து காற்றை சுவாசித்துவிட்டுப் போகும். ஒரு நாளில் சுவாசிக்க மட்டும் மீன்கள் அந்தத் தொட்டியில் மேலும் கீழும் என மொத்தத்தில் பல கிலோமீட்டர் தூரம் பயணிக்கிறது என்பதை ஓர் ஆராய்ச்சியாளர் கணித்தார்.

அதனால் ஒரு தொட்டியில் ஓர் அடி ஆழத்துக்கு மட்டும் நீரை எடுத்துக்கொண்டார். எட்டடி ஆழத் தொட்டியில் பத்து மீன் குஞ்சுகளும், ஓர் அடி ஆழத் தொட்டியில் பத்து மீன் குஞ்சுகளும் வளர்க்கக் கட்டளையிட்டார். மாணவர்கள் இரு தொட்டிகளில் உள்ள மீன் குஞ்சுகளுக்கும் ஒரே அளவான உணவுகள் வழங்கி வளர்த்து வந்தனர். இவ்வாறாக மீன்களும் வளர்ந்து வந்தன. சில வாரங்களிலேயே ஓர் உண்மை வெளிப்பட்டது.

ஓர் அடி ஆழத் தண்ணீர் தொட்டியில் வளர்ந்த மீன்கள் குண்டாகவும்; எட்டடி ஆழத் தண்ணீரில் வளர்ந்த மீன்கள் உடல் மெலிந்தும் காணப்பட்டன. மேலும், குறைவான தண்ணீரில் மீன் வளர்ப்பதால்... அதிக எடை உள்ள மீன்கள் கிடைக்கின்றன.

மீனை வளர்க்க ஏழு மடங்கு குறைவான தண்ணீரே தேவைப் படுகிறது.

மீன் வளர்க்கச் சிறிய தொட்டியே தேவைப்படுகிறது.

மீன் தொட்டிகளைப் பராமரிக்கும் செலவும் கணிசமாகக் குறைகிறது.

இப்படிப் பல வகையில் லாபம் கிடைக்கிறது எனக் கண்டறிந்தார். ஒரு கல்லில் இரு மாங்காய் என்பார்கள். இங்கு மீன் வளர்ப்பில் ஒரு சிறுமாற்றம் செய்ததால் எவ்வளவு லாபம் கிடைக்கிறது பாருங்கள்.

அவர் இந்தக் கண்டுபிடிப்பை ஆய்வுக்கட்டுரையாக வெளியிட்டார். இந்த வகையில் மீன் வளர்த்தால் அதிகம் லாபம் கிடைப்பதால் மியான்மார், தாய்லாந்து, வியட்நாம் போன்ற கிழக்காசிய நாடுகளிலும்; சௌதி அரேபியா, ஏமன் போன்ற மத்திய கிழக்கு ஆசிய நாடுகளிலும் இந்தத் தொழில்நுட்பத்தை அதிகம் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.



எடை இழப்பை சரிசெய்ய...

மேலும், பெண் மீன்கள் முட்டையை உற்பத்தி செய்த பின்னர் அதை முதிர்வுடையச் செய்யும்போது தன் உடல் எடையைப் பெரிதும் இழக்கிறது. உடல் மெலிந்து நலிந்த பின்னர், இவை ஒரு வழியாக முட்டையிடுகிறது. அடுத்து முட்டை யிலிருந்து குஞ்சுகள் வருகின்றன. வெளிவந்த குஞ்சுகளைத் தாய் பாதுகாப்பாகத் தன் வாயிலேயே வைத்துக்கொள்கிறது. குஞ்சுகள் தாயின் வாயில் பாதுகாப்பாக அதிவேகமாக வளர்கிறது. ஆனால், தாய் சரியாகச் சாப்பிடுவதில்லை. அதனால் அதன் உடல் எடை மேலும் படிப் படியாகக் குறைந்து நலிவடைகிறது.

ஒரு தொட்டியில் 50 சதவிகிதம் பெண்மீன் இருந்தால், இனப்பெருக்க காரணத்தால் எடை பெரிய அளவில் குறைகிறது எனப் புரிந்துகொள்ளலாம். மீன் உற்பத்தியின் கண்ணோட்டத்தில் பார்த்தால் இது மிகப் பெரிய அளவில் இழப்பை உண்டு பண்ணுகிறது.

``இத்தகைய இழப்பை எப்படிச் சமாளிப்பது?" என இந்த ஆராய்ச்சியாளர் சிந்திக்கத் தொடங்கினார். முதல் கட்டமாக மீன்களின் உடலிலிருந்து உற்பத்தியான முட்டைகள் அடங்கிய பையைத் திறம்பட வெட்டி எடுத்தார். இதனால் தாய் மீனுக்குச் சிறிய காயம் மட்டுமே ஏற்பட்டது. அதுவும் ஓரிரு நாள்களில் அந்தக் காயம் ஆறிவிட்டது. வெளியே எடுக்கப்பட்ட அந்த முட்டைகளை ஆய்வகத்தில் வைத்து

வளர்க்க வழிமுறையைக் கண்டறிந்தனர். ஆச்சர்யப்படும் வகையில் மீன் முட்டைகள் படிப்படியாக வளர்ந்து முதிர்வடைந்தன. அதே நேரத்தில் முட்டை அகற்றப்பட்ட பெண் மீனின் உடல் எடையும் படிப்படியாக அதிகரிக்க ஆரம்பித்தது. இங்கு ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் கிடைத்தன.

ஆய்வகத்தில் வளர்ந்த முட்டையிலிருந்து ஆயிரக்கணக்கான மீன் குஞ்சுகள் உற்பத்தியாகின. அதனால் மீன் உற்பத்தி தொழிலாளர்கள் அதிக மகிழ்ச்சி அடைந்தனர். காரணம் இந்தக் கண்டுபிடிப்பால் மீன் குஞ்சுகளையும் விற்கலாம். இந்தக் கண்டுபிடிப்பு மீன் வளர்ப்பு தொழில் அதிக லாபத்துடன் வேகமாக வளர காரணமானதாக அமைந்தது.

ஒரு விந்தை என்னவென்றால் மீன்கள் சிலகாலம் ஆண்களாகவும் சில காலம் பெண்களாகவும் வாழும் இயல்புடையவை. இயல்பாகவே ஆண் மீன்கள் உடலளவில் சிறியன. மாறாகப் பெண் மீன்களின் உடல் பருமனானது. இந்தச் சூழலில் ஹார்மோன் வேதிப்பொருள்கள் கொண்டு ஆண் மீன்களைப் பெண் மீனாக மாற்றுவது எளிது என உணர்ந்தார். இப்படி வேதிப்பொருள்களைக் கொண்டு ஆண் மீன்களை எல்லாம் பெண்ணாக மாற்றினார். இதனால் அதிக எடையுள்ள மீன்களை உற்பத்தி செய்ய முடிந்தது. விளைவு மீன் வளர்ப்பு மேலும் அதிக லாபமான தொழிலாக மாறியது.

தாயிடமிருந்து வெட்டி எடுத்து கருமுட்டையை ஆய்வகத்தில் வளர்க்க முடிகிறதே. அதே மாதிரி விந்தணுவை ஆய்வு செய்ய அவர் மனம் தீர்மானித்தது போலும். உணவுக்காகச் சந்தையில் விற்பனைக்குத் தயாராக உள்ள ஆண் மீன்களை வாங்கினார். அதில் உள்ள விந்தணுவைச் சோதனை செய்தனர்.

ஆச்சர்யத்தில் உறைந்தே போய்விட்டனர். இறந்து பல மணி நேரத்துக்குப் பின்னும் ஆண் மீன்களின் உடலில் விந்தணு உயிருடன் இருந்தது. இது ஒரு மகத்தான கண்டுபிடிப்பு.

இப்போது மீன் முட்டைகளும் விந்தணுக்களும் அவரின் ஆய்வகத்திலிருந்தன. இவை இரண்டையும் வைத்து நிறைய ஆராய்ச்சிகள் செய்ய முடிந்தது. இப்படிக் குறைந்த பணச் செலவில், இவர் பல ஆராய்ச்சிகளை நடத்தியுள்ளார்.

இந்த ஆராய்ச்சியாளரின் பெயர் தவமணி ஜகஜோதிவேல் பாண்டியன். இவர் 1939–ம் ஆண்டு மதுரையில் சல்லிக்கட்டுக்கு பெயர் பெற்ற பாலமேடு கிராமத்தில் பிறந்தார். இவரைச் சுருக்கமாகப் பேராசிரியர் ஜி.யி. பாண்டியன் என்றே அழைப்பார்கள்.

தவமணி ஜகஜோதிவேல் பாண்டியன்நிலநடுக்கம் வரக் காரணங்கள்... முன்கூட்டியே கணிக்க முடியுமா?

இவர் சென்னை பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி பட்டம் படித்துக் கொண்டிருக்கும்போது ஒரே நேரத்தில் ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் ஆராய்ச்சி செய்ய வாய்ப்பு கிடைத்தது. ஜெர்மானியர்கள் விமான பயணச் சீட்டுடன் அழைத்தனர். அமெரிக்கர்கள் அழைப்பு மட்டும் கொடுத்தனர். இவர் தன்னை அதிகம் விரும்பும் ஜெர்மனிக்குச் சென்று ஆராய்ச்சி பணி செய்தார். ஆக, ஜெர்மனியில் உள்ள கெயில் பல்கலைக்கழகத்தில் (Kiel University) ஓர் ஆராய்ச்சிப் பட்டமும் (PhD) சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆராய்ச்சிப் பட்டமும் பெற்றார். பின்னர், பழநி செந்திலாண்டவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் பெங்களூர் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர், 1971–ல் இருந்து 2009 வரை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். மேலே பார்த்த அனைத்து கண்டுபிடிப்புக்களும் இவர் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தியதே.

மரங்களின் இலைகளில் கோல்சிசின் என்ற வேதிப்பொருள் உற்பத்தியாகிறது. வயதாகிப் பழுத்து கீழே விழும் இலைகளில் இந்தப் பொருள் அதிகம் இருக்கும்.

கீழே விழும் இந்த இலைகளில் இருக்கும் இந்த வேதிப்பொருள் மரத்தின் அருகே பிற செடி கொடிகளை வளரவிடாது. இந்தப் பொருள் புற்று நோய் மற்றும் ஒரு வகை மூட்டுவலிக்கு (gout) மருந்தாகப் பயன்படுகிறது. இந்தப் பொருளைப் பயன்படுத்தி ஒரு செல்லில் உள்ள குரோமோசோம்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க முடியும். இதனால் மீன்களின் எடை அதிகரிக்கும். இந்த முறையைப் பயன்படுத்திப் பல மீன்களின் உடல் எடையை உயர்த்தியுள்ளார். மேலும், வண்ணங்களில் இவ்வாறு குரோமோசோம்களின் எண்ணிக்கையை மாற்றி பல உடல் அமைப்பு மற்றும் வண்ண மீன்களை உருவாக்கினார். இவ்வகை வித்தியாசமான மீன்களுக்குச் சந்தையில் எப்போதும் நல்ல வரவேற்பு உண்டு. இது தவிர இவர் இருநூறுக்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தினார்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட மீன்கள் உற்பத்தி மற்றும் பிராயிலர் மீன்கள் உருவாக்கம் என நவீன மரபணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மீன்களில் பல ஆராய்ச்சிகளை வழிநடத்தினார்.

- M. திலிப்குமார்

# பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்ற இருளர் குடியிருப்பு மாணவிகள்: உயர்கல்விக்கு அரசு உதவிட வேண்டுகோள்





பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்விக்கு அரசாங்கம் உதவிக்கரம் நீட்ட வேண்டும் என இருளர் சமூகத்தைச் சேர்ந்த 3 மாணவிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்வி மற்றும் பொருளாதாரம் என்பது பழங்குடி இருளர் சமுதாய மக்களுக்கு எட்டாக் கனியாகும். கொத்தடிமை வாழ்க்கை முறையை நெடுங்காலாக அனுபவிக்கும் பழங்குடி இருளர்களை அரசாங்கம் மீட்டெடுத்து பாதுகாக்கிறது. அவர்களுக்கு இருப்பிடத்தை வழங்கி, அவர்களது பிள்ளைகளின் கல்விக்கு ஊக்கமளிக்கிறது. தொழில் ரீதியான வழிகாட்டு நெறிமுறைகளையும் வகுத்துள்ளது. இருளர் இன மக்களுக்காக, திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அடுத்த மீசநல்லூரில் ரூ.5 கோடியில் 100 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கு குடியிருக்கும் சங்கர் மகள் கன்னியம்மாள், ஏழுமலை மகள் தீபகா, பூமிதேவன் மகள் லாவண்யா ஆகிய 3 மாணவிகள் பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்று, உயர் கல்விக்காக அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இவர்களது பெற்றோர், பல்வேறு நிலைகளில் கொத்தடிமைகளாக இருந்து மீட்கப்பட்டவர்கள். மீசநல்லூர் குடியிருப்பில் கடந்த 3 ஆண்டுகளாக வசிக்கின்றனர். தெள்ளார் அரசு மேல்நிலைப் பள்ளியில் படித்து கன்னியம்மாள் 326 மதிப்பெண்ணும், தீபிகா 316 மதிப்பெண்ணும், லாவன்யா 411 மதிப்பெண்ணும் பெற்று தேர்ச்சி அடைந்துள்ளனர்.

கல்வியறிவு குடும்பத்தின் பின்புலம் இல்லாமல், பள்ளி ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் படித்து தேர்ச்சி பெற்றுள்ளனர். மரம் வெட்டுதல், கட்டிட பணி போன்ற கூலி தொழில் செய்து பிழைத்து வருகின்றனர். தந்தையை பிரிந்து வாழும் தீபிகாவின் தாய் அமுலு, ஆடு மேய்ச்சல் பணியில் ஈடுபட்டுள்ளார்.

கடின முயற்சியின் எதிரொலியாக, பிளஸ் 2 பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள இருளர் சமூகத்தை சேர்ந்த 3 மாணவிகளும், உயர்கல்வி படித்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற துடிப்புடன் உள்ளனர். வங்கிப் பணி கனவுடன் தீபிகாவும், வழக்கறிஞர் கனவுடன் லாவண்யாவும், செவிலியர் கனவுடன் கன்னியம்மாளும் உள்ளனர்.

மாணவிகள் மூவரும் கூறும்போது, ''எங்களது பெற்றோர், கொத்தடிமை வாழ்க்கை முறையில் இருந்து மீட்கப்பட்டவர்கள். இந்த நிலையில் இருந்து, எங்களது வாழ்வில் மாற்றம் ஏற்பட வேண்டும். இதற்கு கல்விதான் சிறந்த மருந்தாகும். ஆசிரியர்கள் வழிகாட்டுதலுடன், படிப்பில் கவனம் செலுத்தி பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளோம். உயர்கல்வி படிக்க வேண்டும் என்பது எங்களது விருப்பம். குடும்பத்தின் பொருளாதாரம் என்பது அனைவரும் அறிந்ததே. எங்களது நிலையை உணர்ந்து, உயர்கல்வி படிப்பதற்கு முதல்வர் மற்றும் ஆட்சியர் ஐயா ஆகியோர் உதவிக்கரம் நீட்ட வேண்டும்'' என்றனர்.

- A. ஐயப்பன்

# வாட்ஸ் ஆப்பில் வெளிநாட்டு எண்ணில் இருந்து அழைப்பு வருகிறதா.. உஷார்..!

வாட்ஸ் ஆப் எண்ணுக்கு, வெளிநாட்டு எண்களில் இருந்து அடிக்கடி குறுஞ்செய்தியோ, அழைப்போ வந்தால், மோசடியாளர்களால் நீங்கள் குறிவைக்கப்பட்டு இருக்கலாமென்பதால், உஷாராக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான வாட்ஸ் ஆப் அழைப்புகள், எத்தியோப்பியா (+251), மலேசியா (+60), இந்தோனேசியா (+62), கென்யா (+254), வியட்நாம் (+84) போன்ற நாடுகளின் எண்ணில் இருந்து வருகின்றன.

சர்வதேச எண் குறியீடுகளுடன் வந்தாலும், வாட்ஸ் ஆப் அழைப்புகள் இணையம் வழியாக மேற்கொள்ளலாமென்பதால், உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் அழைப்புகளை செய்யலாம். பல்வேறு நகரங்களில் வாட்ஸ் அப் அழைப்புகளுக்கு, சர்வதேச எண்களை விற்கும் ஏஜென்சிகள் உள்ளன. இதுபோன்ற குறுஞ்செய்திகள், அழைப்புகள் மூலம் எதிர்முனையில் உள்ளவர்கள் வேலை அல்லது எளிதாக லாபம் ஈட்ட வாய்ப்பு என கூறலாம். ஆனால் இதன் முடிவில், நீங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்வீர்கள். மோசடி பேர்வழிகள், வீட்டில் இருந்து வேலை செய்ய கூடிய எளிமையான பகுதி நேர வேலைவாய்ப்பு என கூறுகின்றனர்.

மோசடியில் சிக்க வைக்க முதலில் உங்களின் ஆசையை தூண்டுவார்கள். இதற்காக எளியவேலையை கொடுத்து சிறிய தொகையை அனுப்பி வைப்பர். இதனை நம்பி, வேலை செய்யும் போது உங்கள் விவரங்களை பெற்று மோசடியில் ஈடுபடுவர். மோசடி வலையில் சாதாரண நபர்கள் மட்டுமல்லாது தொழிலதிபர்களும் சிக்கி பணத்தை இழப்பது தொடர்கிறது. சமீபத்தில் பில்லியனரும், ஜீரோதா




சி.இ.ஓவுமான நிதின் காமத், தனது நண்பர் வாட்ஸ் ஆப் மோசடியில் சிக்கி ரூ.5 லட்சத்தை இழந்தது பற்றி பகிர்ந்திருந்தார்.

டிவிட்டரில் ஏராளமானோர் இதுபோன்று வெளிநாட்டு எண்ணில் இருந்து வாட்ஸ் ஆப் அழைப்புகள் வருவதாக பகிர்ந்திருந்தனர். நெட்டிசன் ஒருவர், 'உங்கள் வாட்ஸ் ஆப் எண்ணுக்கு 3 முறை மிஸ்டு கால் வந்துள்ளதா. அனைத்து கால்களும் ஒரு முறை மட்டுமே ரிங் ஆகும். அந்த எண்ணின் புரோபைல் படத்தில் பெண்கள் முகம் இருக்கும்.

இதுபோன்ற அழைப்புகள் வருமாயின், மோசடி பேர்வழிகள் உங்களுக்கு வலைவிரிக்கிறார்கள் என தெரிந்து கொள்ளுங்கள்' என பதிவிட்டிருந்தார். வாட்ஸ் ஆப் மோசடியில் இருந்து தப்பிக்க, ஒரே வழி மோசடி வாட்ஸ் ஆப் அழைப்புகள், குறுஞ்செய்திகளை நம்பி, நாம் அவர்களை தொடர்பு கொள்ளாமல் இருக்க வேண்டும். இது தவிர, இதுபோன்ற வெளிநாட்டு எண் அழைப்போ, குறுஞ் செய்தியோ வந்தால் அதனை உடனடியாக பிளாக் (Block) செய்ய வேண்டும்.

- K. சுப்புலட்சுமி

# +2 மாணவர்களுக்கு சான்றிதழ்களை தாமதமின்றி வழங்க வேண்டும் வருவாய்த்துறைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு



மாணவ, மாணவியர்களுக்கு வருவாய்த்துறையின் வாயிலாக வழங்கப்படும் சான்றிதழ்களை உடனடியாக வழங்கிட வேண்டும் என்று அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.

ராமச்சந்திரனுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

மாணவ, மாணவியர்கள் தங்களுடைய உயர்கல்வியை தொடர்வதற்கு ஏதுவாக, வருவாய் துறையின் மூலம் வழங்கப்பட்டு வரும் சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் ஆகியவற்றை முன்னுரிமை கொடுத்து உடனடியாக வழங்க வேண்டும் என்று அனைத்து மாவட்ட ஆட்சி தலைவர்களையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தி உள்ளார்.

இந்த சான்றிதழ்கள் அனைத்தும் இணைய வழியாக வழங்கப்பட்டு வருவதால், மாணவ, மாணவியர்கள் இணைய வழியாக விண்ணப்பித்து தேவையான சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுமாறு வருவாய்த்துறையின் சார்பில் முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், சான்றிதழ்களை எவ்வித காலதாமதமின்றி வருவாய் வட்டாட்சியர்கள் / வருவாய் கோட்டாட்சியர்கள் உடனடியாக வழங்க வேண்டுமெனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

# தமிழகத்தில் ஏர் கண்டிஷனர் மற்றும் கம்ப்ரசர் தொழிற்சாலை அமைக்க மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா முடிவு




எலக்ட்ரானிக் உபகரணங்கள் தயாரிப்பு நிறுவனமான மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா சுமார் 1,891 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழகத்தில் புதிய உற்பத்தி தொழிற்சாலையை அமைக்க முடிவு செய்துள்ளது.

முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில், ஜப்பான் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அண்டை மாவட்டமான திருவள்ளூர் மாவட்டத்தில் தொழிற்சாலை அமைக்க, மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், மாநில அரசின் வழிகாட்டுதலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பெருவயல் கிராமத்தில், மஹிந்திரா நிறுவனத்துக்கு சொந்தமான, 52 ஏக்கர் நிலத்தில், அறை குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் கம்ப்ரசர்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது.

தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா நிர்வாக இயக்குநர் கசுஹிகோ தமுரா ஆகியோருடன் காணொலி காட்சி மூலம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா நிறுவனம் 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டின் மூலம் ரூ.1,891 கோடியை முதலீடு செய்ய உள்ளது. இதன் மூலம் 2,000–க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும், இதில் 60 சதவீதம் பேர் பெண் ஊழியர்களாக இருப்பார்கள் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சிஎஸ்ஐஆர் - சிஎல்ஆர்ஐ-யின் தோல்பொருட்கள் கொண்டாட்டம் வாரவிழா

அறிவியல் மற்றும் தொழிலியல் ஆராய்ச்சி கவுன்சிலின் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் சிஎஸ்ஐஆர்–சிஎல்ஆர்ஐ, மே1 முதல் 6ந்தேதி வரை சென்னை, கொல்கத்தா, மற்றும் லடாக்கில் "தோல்பொருட்கள் கொண்டாட்டம்" என்ற கருப்பொருளில் ஒரு வாரம் ஒரு ஆய்வகம் என்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. சிஎஸ்ஐஆர்–சிஎல்ஆர்ஐ, 1960 களில் நடைபெற்ற தோல்பொருட்கள் கண்காட்சி மற்றும் தோல் உற்பத்தி பொருட்கள் நிகழ்ச்சியின் நினைவாக சென்னை சிஎஸ்ஐஆர்–சிஎல்ஆர்ஐ வளாகத்தில் சாலைக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





தோல் தொழில்நுட்ப கண்காட்சியில் 100% உண்மையான தோல்பொருட்கள், இந்நிறுவனத்தின் முன்னாள் மாணவர்கள் மற்றும் தொழில்நுட்ப கூட்டாளர்களின் சுமார் 20 அரங்குகள் இருந்தன. சென்னை பெருநகர காவல் துணை ஆணையர் டாக்டர் தீபக் சிவாச், தோல் செயல்முறை தொழில்நுட்பத்தின் முன்னாள் விஞ்ஞானி மற்றும் தலைவர் திரு கே பார்த்தசாரதி ஆகியோர் நேற்று தோல்பொருட்கள் கண்காட்சியைத் தொடங்கி வைத்தனர் 3,000 க்கும் மேற்பட்டோர் அரங்குகளைப் பார்வை யிட்டனர். 2 அரங்குகளில் வியாபாரம் அதிகமாக இருந்தது.

சிஎஸ்ஐஆர்–சிஎல்ஆர்ஐ, தனது பாரம்பரியத்தை தீம் பெவிலியனாக வெளிப்படுத்தியது. இதனை முன்னாள் விஞ் ஞானி மற்றும் பாலிமர் சயின்ஸ் – டெக்னாலஜி தலைவர் டாக்டர் கங்கா ராதாகிருஷ்ணன், சிஎஸ்ஐஆர்–சிஎல்ஆர்ஐ பயோமெட்டீரியல்ஸ் ஆய்வகத்தின் முன்னாள் விஞ்ஞானி – தலைவர் டாக்டர் மேரி பாபு ஆகியோர் திறந்து வைத்தனர். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் உட்பட 3050க்கும் மேற்பட்டோர் இதனைப் பார்வை யிட்டனர்.

தோல் அருங்காட்சியகம்: சிஎஸ்ஐஆர் – சிஎல்ஆர்ஐ அருங்காட்சியகத்தில் இத்தாலிய வம்சாவளியைச் சேர்ந்த 16 ஆம் நூற்றாண்டின் கொள்கலன், 19 ஆம் நூற்றாண்டு கட்லரி பெட்டி மற்றும் ஐரோப்பிய வம்சாவளியைச் சேர்ந்த தையல் பெட்டி உட்பட சில பழங்கால தோல் பொருட்கள் உள்ளன. தோல் பொருத்தப்பட்ட ஐரோப்பிய வம்சாவளி கட்லரி கேஸ் ஃபோர்க்குகள் மற்றும் கத்திகளை ஸ்டைலான முறையில் வைத்திருக்க வடிவமைக்கப்பட்டுள்ளது, இது தோலால் பொருத்தப்பட்டு, தங்க நிறத்தில் முத்திரையிடப்பட்ட வடிவமைப்புகளில் அலங்கரிக்கப்பட்டுள்ளது மேலும் இது மிகவும் நேர்த்தியானது. இது 1800 களின் முற்பகுதியில் பயன்படுத்தப்பட்டது. இத்தாலிய வம்சாவளியைச் சேர்ந்த 16 ஆம் நூற்றாண்டின் கொள்கலன் தோலில் பொருத்தப்பட்டது.



தோல் தையல் பெட்டி செதுக்கப்பட்டு, மெல்லிய தோலால் மூடப்பட்டிருக்கும் மற்றும் இழுப்பறைகள், பெட்டிகள் மற்றும் பித்தளை பொருத்துதல்களுடன் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவும் ஐரோப்பிய வம்சாவளியைச் சேர்ந்தது மற்றும் 1846 ஆம் ஆண்டுக்கு முந்தையது. தோல் ஏற்றுமதி கவுன் சிலின் நிர்வாக இயக்குனர் திரு ஆர் செல்வம், தோல் அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார்.

- தமிழினி

# 15 கோடியில் புனரமைக்கப்படும் 700 ஆண்டுகள் பழமையான திருவள்ளுவர் சிலை உத்தரவு




இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலில் திருப்பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் சென்னை மாநகராட்சி மேயர் ப்ரியா மற்றும் துறையின் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் சேகர்பாபு, “2023 – 2024 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பில் அறிவிப்பு எண் 50ல் மயிலாப்பூர் முண்டகக்கன்னி திருக்கோவிலின் உப கோவிலாக இருக்கக்கூடிய திருவள்ளுவர் திருக்கோவிலை ரூபாய் 15 கோடி செலவில் முழுவதுமாக புனரமைப்பது என அறிவிக்கப்பட்டது. அறிவிப்புக்கு ஏற்ப மாதிரி வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. அமைக்கப்பட இருக்கும் திருக்கோவிலின் மாதிரி வரைபடத்தை முழுமையாகப் பார்த்து திருக்கோவிலையும் ஆய்வு செய்துள்ளோம்.

கலைஞர், வள்ளுவருக்கு கோட்டத்தைக் கண்டவர்; கன்னியாகுமரியில் சிலை




அமைத்தவர்; திருக்குறளுக்கு உரை எழுதியவர். அந்த வகையில் 500 ஆண்டுகளுக்கு மேலான 700 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருவள்ளுவரின் கற்சிலையைப் புதுப்பித்து இந்த இடத்தை பக்தர்கள் விரும்பி வரும் இடமாகவும் சுற்றுலாத்தலமாக ஆக்கவும் கலைஞரின் மகன் தற்போதைய முதலமைச்சர் 15 கோடி செலவில் இதைப் புனரமைத்து உருவாக்கத் திட்டமிட்டுள்ளார்” எனக் கூறினார்.

- D. பாமா

# இந்திய ராணுவத்தில் சீருடை மாற்றம்: ஆக.,1 முதல் அமலுக்கு வருகிறது

நம் ராணுவத்தில், பிரிகேடியர் முதல் அதற்கு மேல் உள்ள பதவிகளை வகிக்கும் அதிகாரிகளுக்கு, ஆக.,1ம் தேதி முதல், ஒரே மாதிரியான சீருடை அறிவிக்கப்பட்டுள்ளது.


பிரதமர் மோடி தலைமையிலான, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, 2019ல் இரண்டாவது முறையாக, ஆட்சி அமைத்தது முதல், 'ஒரே ராணுவம்; ஒரே சீருடை' என்ற, திட்டத்தை செயல்படுத்த முனைப்பு காட்டி வந்தது. சமீபத்தில், கடந்த மாதம் நடந்த, ராணுவ கமாண்டர் மாநாட்டில், அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் கேட்டு, சீருடை மாற்ற முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி, பிரிகேடியர், மேஜர் ஜெனரல், லெப்டினன்ட் ஜெனரல் மற்றும் டைரக்டர் ஜெனரல் வரை உயர் பதவிகளில் உள்ள அதிகாரிகளுக்கு தலைக்கவசம், தோள்பட்டை, ரேங்க் பேட்ஜ்கள், சட்டை காலர் பேட்ஜ்கள், பெல்ட்கள் மற்றும் காலணிகள் ஆகியவை பொதுவானதாக இருக்கும். லேன்யார்ட்ஸ் எனப்படும் கயிறை, ராணுவ அதிகாரிகள், இனிமேல் அணியமாட்டார்கள் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கர்னல்கள் மற்றும் கீழ்நிலை அதிகாரிகள் அணியும் சீருடையில், எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. ராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளதாவது:

'ஒரே சீருடை அனைத்து மூத்த நிலை அதிகாரிகளுக்கும், பொதுவான அடையாளத்தை உறுதி செய்யும், அதே நேரத்தில் நம் ராணுவத்தின் உண்மையான நெறிமுறைகளையும் பிரதிபலிக்கும்.

இந்நடவடிக்கை, ராணுவ அதிகாரிகளிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவதுடன், அதிகாரிகளிடையே நல்ல ஒத்துழைப்பையும், இணக்கத்தையும் ஏற்படுத்தும்.இவ்வாறு, அந்த வட்டாரங்கள் கூறின.




## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 10,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 8,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 5,000/- |
| Full Page Black & White | : | ₹ 5,000/- |
| Half Page Black & White | : | ₹ 2,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: penakural@yahoo.com

PENA KURAL TAMIL MONTHLY

UPI Number:
9962245338

# “30 நிமிடங்களுக்கு மேல் போன் பேசினால் உயர் ரத்த அழுத்தம் ஏற்படும்“ ஆய்வு சொல்வது உண்மையா?

“வாரத்துக்கு 30 நிமிடங்களுக்கு மேல் போன் பேசினால் உயர் ரத்த அழுத்தம் ஏற்படும்“ என்று சமீபத்திய ஆய்வு கூறுகிறது.

ஐரோப்பியன் ஹார்ட் ஜர்னலில் (European Heart Journal) வெளியாகி உள்ள ஆய்வு ஒரு வாரத்தில் 30 நிமிடங்கள் அல்லது அதற்கும் மேல் ஒருவர் போன் பேசினால், அவருக்கு உயர் ரத்த அழுத்தம் ஏற்பட 12 சதவிகிதம் வாய்ப்பு உள்ளதாகக் கூறுகிறது. மேலும், மொபைல் போன் பயன்படுத்தாதவர்களைவிட பயன்படுத்து பவர்களுக்கு உயர் ரத்த அழுத்தம் ஏற்பட 7 சதவிகிதம் வாய்ப்பு உள்ளது என்றும் கூறியுள்ளது.



இன்றைய காலகட்டத்தில், 30 நிமிடங்களுக்கு மேல் போன் பேசியாக வேண்டும் என்ற நிலை பலருக்கும் உள்ளது. நிலைமை அப்படி இருக்க இந்த ஆய்வுத் தகவல் பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மொபைல் போன் பயன்படுத்தினால் உண்மையில் உயர் ரத்த அழுத்தம் ஏற்படுமா என்ற கேள்விக்கு சிவகங்கையைச் சேர்ந்த பொதுநல மருத்துவர் ப.ஃபரூக் அப்துல்லா விளக்கம் அளிக்கிறார்...

“இன்றைய நவீன காலகட்டத்தில் அனைவரும் தினமும் குறைந்தபட்சம் 15 – 20 நிமிடங்களாகவது போன் பேசுகிறோம். இதுவே வாரத்துக்கு 2 – 3 மணி நேரம் ஆகிறது. ஆக பெரும்பாலும் மக்கள் இப்போது 30 நிமிடங்களுக்கு மேல்தான் போன் பேசுகிறார்கள். இதுமட்டுமல்லாமல் பேசுவதைத் தவிர, சராசரியாக 3 – 4 மணி நேரம் பிற தேவைகளுக்காக போனை உபயோகிக்கிறோம்.

இந்த ஆய்வில் கலந்துகொண்டவர்களின் சராசரி வயது 54. பொதுவாகவே இந்த வயதில் பெரும்பாலானவர்களுக்கு உயர் ரத்த அழுத்தம் இருக்கும். இந்த ஆய்வு அதிகம் போன் பயன்படுத்தாதவர்களுக்கு உயர் ரத்த அழுத்தம் அதிகமாக ஏற்படுவதில்லை என்று கூறுகிறது. ஒருவேளை இவர்கள் ரத்த அழுத்தம் உண்டாவதற்கான காரணிகளை அதிகம் கொண்டிருக் காதவர்களாக இருக்கலாம்.

உயர் ரத்த அழுத்தம் என்பது உடல் பருமன், புகை, மது, மரபணுக் காரணி, மன அழுத்தம், தூக்கமின்மை, உடல் உழைப்பு இல்லாமை போன்ற காரணங்களால் ஏற்படுவது.

தனிமையில் இருப்பவர்கள், மன அழுத்தம் உடையவர்கள், பணி நிமித்தமாக போன் பயன்படுத்துபவர்கள், வாழ்க்கை துணையைப் பிரிந்து தொலைவில் இருப்பவர்கள்... இவர்கள் அனைவரும் அதிகமாக போன் பேசுபவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு இயல்பாகவே உயர் ரத்த அழுத்தம் வர வாய்ப்புகள் உள்ளன.

முக்கியமாக, இன்றைய உலகத்தில் 30 நிமிடங்களுக்கு மேல் போன் உபயோகிக்கக் கூடாது என்பது சாத்தியமா என்று தெரியவில்லை. மக்கள் அதைப் பின்பற்றுவார்களா என்பதும் கேள்விக்குறிதான். எனவே, இப்போதைக்கு அதிகம் போன் பேசுவதால் உயர் ரத்த அழுத்தம் ஏற்படும் என்று கூற முடியாது” என்று கூறுகிறார்.

\- பாக்கியராஜ்

# எங்கும் தமிழ்... எதிலும் தமிழ்....
# நிலையை உருவாக்குவற்கான சிறப்புச் சட்டம்!



தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் நாள் தோறும் ஒரு திருக்குறளை அதற்கான பொருளுடன் எழுதி வைக்க வேண்டும் எனவும் ஆட்சி சொல்லகராதியில் உள்ள ஓர் ஆங்கிலச் சொல் மற்றும் அதற்கு இணையான தமிழ்ச் சொல்லையும் எழுதி வைக்க வேண்டும் என்றும் அரசுத்துறை செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறைத்தலைவர்களுக்கு தலைமைச் செயலாளர் ஆணையிட்டுள்ளார்.

அரசு அலுவலகங்களில் திருக்குறள் மற்றும் கலைச்சொற்களை எழுத வேண்டும் என்று கடந்த 2000–ஆவது ஆண்டிலேயே அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது எனவும் ஆனாலும், அதை தவறாமல் கடைபிடிக்கும்படி தலைமைச் செயலாளரே நினைவூட்ட வேண்டிய நிலைமை தமிழ்நாட்டில் இருப்பது வருத்தமளிக்கிறது எனவும் தமிழர்களின் வாழ்வில் அனைத்திற்கும் முதலாவதாக அன்னைத் தமிழ் தான் இருக்க வேண்டும் எனவும் ராமதாஸ் பேசியுள்ளார்.

அன்னைத் தமிழை அழிவிலிருந்து காப்பதற்காக தமிழ்நாடு அரசு செய்ய வேண்டிய நடவடிக்கைகள் இன்னும் ஏராளம் எனவும் கடந்த பிப்ரவரி திங்களில் சென்னையிலிருந்து மதுரை வரை தமிழைத்தேடி பயணத்தை நான் மேற்கொண்டிருந்த போது, கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளை 08.08.1977–ஆம் நாளில் பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண் 575–இன்படி தமிழ் மொழிக்கு முதன்மை இடம் வழங்கி அமைக்க வேண்டும் என்று அனைத்து வணிகர்களுக்கும் தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறையும், தமிழ் வளர்ச்சித் துறையும் அறிவுறுத்தின எனக் கூறிய அவர் ஆனாலும் அதன் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவற்றை தமிழக அரசு தொடங்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்துள்ளார்.

பட்ட மேற்படிப்பு வரை தமிழ்க் கட்டாயப்பாடம், பட்டப்படிப்பு வரை தமிழ் கட்டாயப் பயிற்றுமொழி, நீதிமன்றங்களிலும், கோவில்களிலும் தமிழ், தமிழில் படித்தவர்களுக்கு உயர்கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இட ஒதுக்கீடு, எங்கும் தமிழ்... எதிலும் தமிழ் என்ற நிலையை உருவாக்குவற்கான சிறப்புச் சட்டம் என தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன எனவும் அவை அனைத்தையும் தமிழக அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

- தமிழ் வீரன்

# ரேசன் கடைகளில் இனி கூகுள் பே, போன் பே மூலம் பணம் செலுத்தலாம்.. வெளியான புது அறிவிப்பு..!

தற்போது அனைவரின் கைகளிலும் செல்போன் தவழ்கிறது. செல்போனின் கூகுள் பே, போன் பே போன்ற பணப் பரிவர்த்தனை செயலிகளும் வைத்திருக்கிறார்கள்.

டீ குடித்துவிட்டு ரூ.10 பணம் செலுத்த வேண்டும் என்றாலும் கூட கடைகளில் உள்ள QR code அட்டை மூலம் ஸ்கேன் செய்தே செலுத்துகின்றனர். குக்கிராமங்களில் கூட QR code அட்டை மூலம் பணம் செலுத்தும் வசதி வந்துவிட்டது.

என்றாலும் கூட தமிழகத்திலுள்ள ரேசன் கடைகளில் சில்லறையாக பணம் கொடுத்துவிட்டு சர்க்கரை, கோதுமை உள்ளிட்ட பொருட்கள் வாங்க வேண்டிய சூழல் உள்ளது. ஆகவே, பணம் செலுத்தும் முறைகளில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என வாடிக்கையாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் அனைத்து ரேஷன் கடைகளிலும் Google Pay, Phone pay மற்றும் Paytm மூலம் பணப் பரிவர்த்தனை செய்யலாம் என கூட்டுறவுத்துறை



அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்த முறை காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதற்கட்டமாக நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

மே மாதம் இறுதிக்குள் தமிழகத்தில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் இந்த UPI வசதி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, ரேஷன் கடைகளிலும் UPI மூலம் பணம் பரிவர்த்தனை செய்துகொள்ள முடியும்.




# புதிய பாலை அறிமுகம் செய்தது ஆவின்!




வைட்டமின் A & D செறிவூட்டப்பட்ட பால், உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதிலும், கண்பார்வையை மேம்படுத்துவதிலும் மற்றும் எலும்புகளை உறுதிப்படுத்துவதிலும் பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ள ஆவின் நிர்வாகம் புதிய வகை பாலை அறிமுகம் செய்துள்ளது.

**புதிய வகை பால் அறிமுகம்**

வைட்டமின் A மற்றும் வைட்டமின் D செறிவூட்டம் செய்யப்பட்ட பர்ப்பிள் நிற பால் பாக்கெட் 09.05.2023 அன்று முதல் விநியோகம் செய்யப்பட இருப்பதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஆவின் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், ஆவின் நிறுவனம் நாளொன்றுக்கு சுமார் 30 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்து வருகிறது. கடந்தாண்டு சராசரி பால் விற்பனையைவிட 3 இலட்சம் லிட்டர் அதிகரித்திருக்கிறது. இந்தநிலையில், வைட்டமின் A & D செறிவூட்டப்பட்ட பால், உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதிலும், கண்பார்வையை மேம்படுத்துவதிலும் மற்றும் எலும்புகளை உறுதிப்படுத்துவதிலும் பங்கு வகிக்கின்றது.

**செறிவூட்டப்பட்ட பால்**


பாலில் கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் சத்துக்கள் அதிக அளவில் காணப்படுகிறது. இந்த சத்துக்கள், எலும்பு மற்றும் பல் வளர்ச்சிக்கு இன்றியமையாதவையாகும். மேலும் உடலுக்கு தேவையான கால்சியத்தை பெற்றுத் தருவதில் வைட்டமின் D பங்களிப்பதினால், பாலில் வைட்டமின் D செறிவூட்டம் செய்வது மிகுந்த பயனளிப்பதாக இருக்கும் என இந்திய உணவு பாதுசாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் பரிந்துரைத்துள்ளது. அதன் அடிப்படையில் வைட்டமின் A மற்றும் D செறிவூட்டப்பட்ட பால் அறிமுகப்படுத்தப்படும் என சட்டசபை கூட்டத் தொடரில் பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித்துறை மானியத்தின்போது அறிவிக்கப்பட்டது.

**பர்ப்பிள் நிற பால் பாக்கெட்**

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையிலும் வாடிக்கையாளர்களின் நலன் கருதியும். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில், வைட்டமின் A மற்றும் வைட்டமின் D செறிவூட்டம் செய்யப்பட்ட பசும் பால் (பர்ப்பிள் நிற பால் பாக்கெட்) 09.05.2023 அன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையத்தால் (FSSAI) பாலில் செறிவூட்டுதலுக்காக அனுமதிக்கப்பட்ட அளவில் பால் வகைகளில் வைட்டமின் A மற்றும் D செறிவூட்டம் செய்யப்படுகிறது. வாடிக்கையாளர்கள் செறிவூட்டம் செய்யப்பட்ட ஆவின் பசும் பால் வகையினை வாங்கி பயன்டுத்துவதினால் உடலுக்கு தேவையான வைட்டமின் A மற்றும் D கிடைக்கப்பெறும் என ஆவின் நிர்வாகம் கூறியுள்ளது.

- G. தீபக்

# பிரதமர் மோடியின் 100-வது மனதின் குரல் நிகழ்ச்சி: ஐ.நா. சபையில் நேரடி ஒலிபரப்பு




பிரதமர் நரேந்திர மோடியின் 100–வது மனதின் குரல் நிகழ்ச்சி வானொலியில் ஒலிபரப்பாகிறது. நாடு முழுவதும் 4 லட்சம் இடங்களில் இந்த நிகழ்ச்சியை ஒலிபரப்பு செய்ய பாஜக ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த 2014–ம் ஆண்டு மே மாதம் நாட்டின் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றார். அதே ஆண்டு அக்டோபர் 3–ம் தேதி அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்ஷன் மூலம் மனதின் குரல் நிகழ்ச்சியில் அவர் முதல் முறையாக உரையாற்றினார். அப்போது முதல் ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையும் மனதின் குரல் நிகழ்ச்சியில் நாட்டு மக்களிடையே அவர் உரையாற்றினார்.

அந்த வகையில், 100–வது மனதின் குரல் நிகழ்ச்சி 11 மணிக்கு ஒலிபரப்பானது. இந்நிகழ்ச்சி, தனியார் பண்பலை உட்பட 1,000 வானொலி நிலையங்கள் மற்றும் பல்வேறு தொலைக்காட்சிகளில் ஒலிபரப்பு செய்யப்பட்டது.

இதுபோல பாஜக சார்பில் நாடு முழுவதும் 4 லட்சம் இடங்களில் மனதின் குரல் நிகழ்ச்சியை ஒலிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சி



வெற்றி பெறுவதற்கான நடவடிக்கைகளை பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா மேற்கொண்டார்.

இதுகுறித்து பாஜக பொதுச் செயலாளர் துஷ்யந்த் கவுதம் டெல்லியில் நிருபர்களிடம் கூறியதாவது:–

பிரதமர் நரேந்திர மோடியின் 100–வது மனதின் குரல் நிகழ்ச்சியை நாட்டு மக்கள் அனைவரிடமும் கொண்டு செல்ல பாஜக ஏற்பாடு செய்தது. அந்தந்த மாநிலங்களின் பாஜக எம்பிக்கள், எம்எல்ஏக்கள், மனதின் குரல் நிகழ்ச்சியை மக்கள் கேட்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இதன்படி ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதியிலும் குறைந்தபட்சம் 100 இடங்களில் மனதின் குரல் நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்யப்பட உள்ளது. ஒட்டுமொத்தமாக நாடு முழுவதும் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட இடங்களில் நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்யப்பட்டது.

அனைத்து மாநிலங்களின் ஆளுநர் மாளிகைகளில் மனதின் குரல் ஒலிபரப்பு நிகழ்ச்சி நடைபெறும். இதில் பத்ம விருது பெற்றவர்கள், முக்கிய பிரபலங்கள் பங்கேற்றார்கள். பாஜக மற்றும் கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களில் முதல்வர்களின் வீடுகளில் மனதின் குரல் நிகழ்ச்சி ஒலிபரப்புசெய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளிலும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றார்கள். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் மனதின் குரல் நிகழ்ச்சியை கேட்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்பாடுகளை செய்துள்ளோம். நிகழ்ச்சி ஏற்பாடு களை கட்சித் தலைவர் நட்டா கண்காணித்து வருகிறார். இவ்வாறு துஷ்யந்த் கவுதம் தெரிவித்தார்.

100–வது மனதின் குரல் நிகழ்ச்சியை ஒட்டி சிறப்பு அஞ்சல்தலை மற்றும் 100 ரூபாய் நாணயத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அண்மையில் வெளி யிட்டார். இந்த நாணயம் மற்றும் அஞ் சல் தலையில் மனதின் குரல் நிகழ்ச்சியின் லோகோ அச்சிடப்பட்டு உள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் 100–வது மனதின் குரல் நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பு செய்யப்பட்டது. மேலும் நியூயார்க்கில் உள்ள இந்திய துணைத் தூதரகம் மற்றும் அமெரிக்கவாழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பாக நியூஜெர்சி நகரிலும் பிரதமரின் உரை ஒலிபரப்பு செய்யப்பட்டது.

பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி கவுரவ் துவிவேதி கூறும்போது, “பிரதமர் நரேந்திர மோடி இந்தி மொழியில் மனதின் குரல் நிகழ்ச்சியில் பேசுகிறார். அவரது நிகழ்ச்சி 22 இந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு ஒலிபரப்பு செய்யப் பட்டு வருகிறது. அதோடு ஆங்கிலம் உள்ளிட்ட 12 வெளிநாட்டு மொழிகளிலும் ஒலிபரப்பாகிறது. 100–வது மனதின் குரல் நிகழ்ச்சியும் இதே நடைமுறையில் ஒலிபரப்பு செய்யப்படும். இந்தியா மட்டு மன்றி உலகம் முழுவதும் பிரதமர்மோடியின் வானொலி நிகழ்ச்சி சென்றடையும்” என்று தெரிவித்தார்.

இதுகுறித்து மைக்ரோசாப்ட் நிறுவனரும் உலகின் முன்னணி கோடீஸ்வரர்களில் ஒருவருமான பில்கேட்ஸ் தனது ட்விட்டர் பக்கத்தில்,“சுகாதாரம்,தூய்மை,பெண்களின் பொருளாதார மேம்பாடு மற்றும் நிலையான வளர்ச்சி இலக்கு தொடர்புடைய இதர பிரச்சினைகளுக்கு தீர்வு காண மனதின் குரல் நிகழ்ச்சி ஊக்கமளித்து வருகிறது. 100–வது நிகழ்ச்சிக்கு வாழ்த்துகள்” என பதிவிட்டுள்ளார்.

- தமிழ் மணி

# விவசாயிகள் கலக்கம்!
# இனி விவசாயக் கடனுக்கு சிபில் ஸ்கோர் பார்க்கப்படும்!

விவசாயம் என்பது விவசாயிகளுக்கு எப்போதுமே நஷ்டம் தரும் விஷயமாகவே இருந்து வருகிறது. இதற்குப் பின்னால் வரும் முக்கியக் காரணம், விவசாயி இயற்கையைச் சார்ந்து விவசாயம் செய்வதும், அதே சமயம் அவன் பயிர்களை விற்கச் சந்தையை நம்பியிருப்பதும்தான். மறுபுறம், சந்தையின் சிலந்தி வலை விவசாயிகளின் இந்த பிரச்சினைகளை அதிகரிக்கிறது. உண்மையில், விவசாயிகளின் பயிர்களுக்கு உரிய விலை கிடைத்தாலும், உரிய நேரத்தில் பணம் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், புதிய பயிர் விதைக்க, வங்கியில் பெறும் கடனை நம்பி விவசாயி, தற்போது இந்த பயிர்க்கடனையும் இந்திய ரிசர்வ் வங்கி முடக்கியுள்ளது. பயிர்க் கடனுக்கு விவசாயிகளுக்கு சிபில் மதிப்பெண் என்ற நிபந்தனையையும் ரிசர்வ் வங்கி விதித்துள்ளது. இதனால் விவசாயிகளின் பிரச்னைகள் அதிகரித்துள்ளது. முழு விஷயம் என்ன என்பதைப் புரிந்துகொள்வோம்.

முதலில் CIBIL ஸ்கோர் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்

CIBIL ஸ்கோர் என்பது மூன்று இலக்க எண், இது வங்கியில் கடன் பெற எந்த நபரின் தகுதியையும் காட்டுகிறது. இந்த சிமிஙிமிலி மதிப்பெண், எந்தவொரு நுகர்வோர் செய்த செலவினத்தின் அடிப்படையில், கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட கட்டணத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. அத்தகைய சூழ்நிலையில், சிறந்த சபில் மதிப்பெண் பெற்றவருக்கு, வங்கி மூலம் கடன் எளிதாக வழங்கப்படுகிறது.

**மகாராஷ்டிராவில் விவசாயிகள் கலக்கம்**

பயிர்க் கடனுக்கான விவசாயிகளின் சிபில் ஸ்கோர் சிறப்பாக இருக்கும் என்ற ரிசர்வ் வங்கியின் நிபந்தனை விவசாயிகளை வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. இதன் காரணமாக நூற்றுக்கணக்கான விவசாயிகள் திங்கள்கிழமை மகாராஷ்டிராவின் அகோலா மாவட்டத்தின் மூர்த்திஜாபூரில் உள்ள அரசு அலுவலகத்திற்கு கொளுத்தும் வெயிலில் காளை வண்டி மற்றும் பாத ஊர்வலம் நடத்தினர். அப்போது, விவசாயிகள் கடனுதவி வழங்குவதற்கான விதிகளை எளிதாக்கக் கோரி முழக்கங்களை எழுப்பினர். உண்மையில், பயிர்க் கடனுக்கான சிவில் மதிப்பெண் நிபந்தனையை இந்திய ரிசர்வ் வங்கி வைத்துள்ளது. இதில், சிவில் மதிப்பெண் பெற்ற விவசாயிகளுக்கு மட்டுமே வங்கிகளில் பயிர்க்கடன் வழங்கப்படும், இதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்நிலையில், விவசாயிகள் திங்கள்கிழமை மாட்டு வண்டி ஊர்வலம் நடத்தி போராட்டத்தை பதிவு செய்தனர்.




**இதனால் 90 சதவீத விவசாயிகள் வருத்தம் அடைந்துள்ளனர்**

பயிர்க்கடனுக்கு ரிசர்வ் வங்கி விதித்துள்ள சிவில் மதிப்பெண் நிபந்தனையால், 90 முதல் 92 சதவீத விவசாயிகள் பயிர்க்கடன் பெற முடியாமல் தவிப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். பெரும்பாலான விவசாயிகளின் சிவில் மதிப்பெண் சரியாக இல்லை என விவசாயிகள் கூறுகின்றனர். இதுபோன்ற சூழ்நிலையில், அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் பயிர்க்கடன் பெற முடியாத நிலை ஏற்படும். வரும் காரீப் பருவத்திற்கு வங்கிகள் கடனுதவி அளிக்கும் வகையில் எங்களுக்கு இந்த நிபந்தனையை நீக்க வேண்டும் என விவசாயிகள் கூறுகின்றனர். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், பயிர்க்கடன் பெற அரசு மற்றும் தனியார் வங்கிகளை தொடர்பு கொள்ள துவங்கியுள்ள நிலையில், ரிசர்வ் வங்கி விதித்துள்ள நிபந்தனையால், பயிர்க்கடன் கிடைக்காமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

- P. **அசோக்குமார்**


Printed by **NV SIVASHANKAR** and Published by **NV SIVASHANKAR** on behalf of **PENA KURAL**, Tamil Monthly and Printed at **J.M.PROCESS**, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. And Published at No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. Editor: **RATHIKA S.**

V.AYYANAR
9884166636

NO.3/885, PILLAYAR KOIL STREET
OMR, METTUKUPPAM
CHENNAI-600097

# DEEPSHIKA AUTO WORKS

ALL KINDS OF TWO WHEELERS REPAIRING, WATER WASH SERVICE CENTRE

email: deepshikaautoworks@gmail.com

BM

Electrical, Plumbing
&
Air Conditioner Work

B. MANIKANDAN
9884555002
044 48612123
manikandanb2512@gmail.com
3/885, Pillayar Koil Street,
Mettukuppam, OMR, Chennai - 600097


வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
S D A
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance Available
Rs.12,999/-
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.